ஓ
சிவமயம்

நற்சிந்தனை மலர்

10.05.2018



சிவத்தமிழ் வித்தகர், திருமந்திரவாரிதி, கலாபூஷணம்
சிவ.மகாலிங்கம் B.A, M.A Dip-in-Edu, S.L.E.A.S

சமர்ப்பணம்

குப்பிழானில் வீற்றிருந்து அருளாட்சி புரியும்
கற்பக விநாயகப் பெருமானின் மீளா அடிமைகளாக
வாழ்ந்த சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் தம்பதிகளின்
நினைவாக "நற்சிந்தனை மலர்" என்ற இந்நூல்
வெளியிடப்படுகிறது. இவர்களுடைய இரண்டாவது
புத்திரன் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
இந்து சாதனம் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளின்
தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.
இவர்களது மூன்றாவது புத்திரனும்
கனடா இந்து சமயப் பேரவையின் செயலாளருமாகிய
சிவ.முத்துலிங்கம் அவர்களால்
இந்நூல் வெளியிடப்படுகிறது.
பிள்ளைகளாகிய நாம் நமது பெற்றோரின்
திருவடிகளில் இந்நூலைச் சமர்ப்பணம்
செய்கின்றோம்.

ஓ
சிவமயம்

வானுறையும் தெய்வங்கள்



அமரர்கள்
சிவசுப்பிரமணியம் அன்னபூரணம்
தம்பதிகள்

முன்னுரை

சைவத்தின் காவலர், சைவ சேனாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என்று விரும்பிய பெரியோர்களால் 1888 ஆம் ஆண்டு சைவபரிபாலனசபை ஆரம்பிக்கப்பட்டது. 1889 ஆம் ஆண்டிலிருந்து சைவபரிபாலன சபையினர் இந்து சாதனம் என்ற பத்திரிகையை வெளியிட்டு வருகின்றார்கள். சைவமும் தமிழும் நன்கு அறிந்த அறிஞர்கள் பலர் இப்பத்திரிகையின் ஆசிரியர்களாக இருந்து பணியாற்றினார்கள். நாடறிந்த எழுத்தாளரும், வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராகவும் இருந்த சிற்பி மு.சரவணபவன் அவர்கள் பத்திராதிபராக இருந்த காலத்தில் சமூகத்திற்குப் பயன்படக் கூடியதான சமயக் கட்டுரைகளை இந்து சாதனத்திற்கு எழுதித் தரும்படி அடியேனை அன்புடன் வேண்டினார். அவருடைய வேண்டுதலை ஏற்று எழுதப்பெற்ற பதினைந்து கட்டுரைகளும் எனது குல தெய்வமாகிய குப்பிழான் கற்பக விநாயகராலயத்தை பற்றி இந்து சாதனத்தில் வெளிவந்த கட்டுரையையும் இணைத்து பதினாறு கட்டுரைகள் இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதனை நமது பெற்றோரின் நினைவாக வெளியிட வேண்டுமென்று எனது அன்புச் சகோதரர் சிவ.முத்துலிங்கம் விரும்பினார். அவரின் விருப்பமும் உதவியுமே இந்நூல் வெளிவருவதற்கான முக்கிய காரணியாகும். தந்தையார் முப்பது வருடங்களுக்கு முன்பு 1988ஆம் ஆண்டிலும் தாயார் பதின்மூன்று வருடங்களுக்கு முன்பு 2005ஆம் ஆண்டிலும் சிவபதம் அடைந்தார்கள். தங்களுடைய பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகத் தங்களையே பரித்தியாகம் செய்த எமது பெற்றோரின் திருவடிகளில் இந்நூலினைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

பிள்ளைகள்
குப்பிழான்,
ஏழாலை.

பொருளடக்கம்

	விடயம்			பக்
01.	குப்பிழான் கற்பக விநாயகர் ஆலயம்	இந்து சாதனம்	17.08.2010	03-06
02.	நாவும் நல்வாழ்க்கையும்	இந்து சாதனம்	17.08.2010	07-09
03.	மூவகைப் பலம்	இந்து சாதனம்	17.09.2010	10-12
04.	வாக்கும் வாழ்வும்	இந்து சாதனம்	18.10.2010	13-16
05.	அன்பின் வலிமை	இந்து சாதனம்	17.11.2010	17-20
06.	அறவாழ்வின் அவசியம்	இந்து சாதனம்	18.12.2010	21-24
07.	திருத்தொண்டு நெறி	இந்து சாதனம்	15.01.2011	25-28
08.	வாழ்வில் நிதானம்	இந்து சாதனம்	17.03.2011	29-32
09.	பக்தி மார்க்கமே பரமனடி காட்டும்	இந்து சாதனம்	14.04.2011	33-35
10.	மானிடப் பிறவியின் மாண்பு	இந்து சாதனம்	15.05.2011	36-39
11.	அருளியலும் அறிவியலும்	இந்து சாதனம்	16.06.2011	40-43
12.	திருவிழாவும் அன்னதானமும்	இந்து சாதனம்	13.03.2011	44-47
13.	தானங்களில் உயர்ந்தது	இந்து சாதனம்	18.09.2011	48-50
14.	தெய்வங்களாகி.....	இந்து சாதனம்	17.12.2011	51-53
15.	காலம் நம் கையில் கட்டுண்டு கிடவாது	இந்து சாதனம்	13.02.2012	54-56
16.	பிரார்த்தனை	இந்து சாதனம்	14.06.2013	57-60

குப்பிழான் கற்பக விநாயகர் ஆலயம்

காசிவாசி செந்திநாதையார் பிறந்த ஊர் கலையும் தமிழும் சைவமும் வளர்ந்தமண். இதுவே சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் செம்மண் வளமுடைய கிராமமாகிய குப்பிழான்பதி. இக்கிராமத்து மக்களின் உள்ளங் கவர்ந்த கள்வனாக, ஓங்கார வடிவினனாக இருந்து அருள் பாலிக்கும் அப்பனின் திருத்தலமே கற்பக விநாயகப் பெருமான் ஆலயம். கௌரிஅம்பாள் சமேதராகிய கேதீஸ்வரப் பெருமான் வீற்றிருந்து அருள்புரியும் மாதோட்டத்திலிருந்து நமது முன்னோர்கள் மூன்று விநாயகர் விக்கிரகங்களைக் கொண்டு வந்து ஒன்றை நீர்வேலி வாய்க்காற்தரவையிலும், மற்றையதைப் புன்னாலைக்கட்டுவன் ஆயாக் கடவையிலும், மூன்றாவதைக் குப்பிழான் கற்கரையிலும் பிரதிஷ்டை செய்ததாக வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசடிப் பிள்ளையார் என்று அழைக்கப்படும் கற்பக விநாயகப் பெருமானின் ஆலயத்தில் நடராஜர், முருகன், நாராயணர், லஷ்மி, வைரவர், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரர், திருமுறைச்செல்வர் கோயில்கள் பரிவாரக் கோயில்களாக உள் வீதியில் அமைக்கப்பட்டுள்ளன. இராஜ கோபுரம் சித்திரத்தேர், புதிய அழகான சப்பரம், சபாமண்டபம் என்பவற்றுடன் கூடிய அருள்மிகு ஆலயமாகக் கற்பக விநாயகர் ஆலயம் திகழ்கிறது. இக்கோயிலிலே அமைந்திருக்கும் விநாயகப் பெருமானின் எழுந்தருளி மூர்த்தம் அருளை வாரி வழங்கும் அழகுக் கோலமாகக் காணப்படுகின்றது. ஆலயத்திற்கு வருகை தருகின்ற சிவாச்சாரியர்கள், சமயப் பெரியார்கள் அனைவரும் விநாயகப் பெருமானின் எழில்மிகு எழுந்தருளி மூர்த்தத்தின் அருட் கோலத்தைப் பார்த்து வியந்து போற்றியுள்ளார்கள்.

ஆலயத்தில் நித்திய, நைமித்தியக் கிரியைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நூறாண்டு காலத்திற்கு முன்பே பெருந் திருவிழா என்ற பிரமோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. மகோற்சவ விழாவில் ஒவ்வொரு நாளும் பல்வேறு சிறப்பு

நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. சிவபூசைக்காட்சி, வேதபாராயண விழா, திருமுறைவிழா, வேணுகானவிழா, கோ பூசை ஆகிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மகோற்சவ காலத்தில் அன்னதானம் வழங்கும் வைபவம் பல அடியார்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மாகேசுர பூசை முறைப் படியாகச் செய்த பின்பே நாளாந்தம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது.

மாதம் தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்தி விழா இங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆவணிச் சதுர்த்தி விழா மிக விமரிசையாக நடைபெறும். விநாயகர் ஷஷ்டி விரத காலத்தில் இலட்சார்ச்சனை நடைபெற்று இறுதிநாள் 108 கலச அபிஷேகம் இடம்பெறும். பின்னர் கஜமுகாசுரன் போர் நடைபெறும். கந்தஷஷ்டி விரதத்தின் இறுதியிற் சூரன்போரும் இங்கு மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. திருவெம்பாவை காலத்தில் நடராஜப் பெருமானுக்கு விஷேட பூசைகள் இடம்பெறும். ஆருத்திரா தரிசனத்தன்று (திருவாதிரை) அதிகாலை சிதம்பர தரிசனத்தை இங்குள்ள நடராஜர் சந்நிதியிற் காண்பதற்காக பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடுவார்கள்.

ஆலயச் சூழலில் அழகான நந்தவனம் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு வெள்ளெருக்கு, கடம்பு, கொன்றை, நெல்லி, பாதிரி, பன்னீர், பலாசு, திருவாத்தி, தர்ப்பை, மந்தாரை ஆகிய இறைவனின் பூசைக்குப் பயன்படும் மரங்கள் யாவும் காணப்படுகின்றன. இராஜமூர்த்தமாக மூலஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும் விநாயகப்பெருமானுக்கு நாளாந்தம் கழுத்துக்கு அறுகு மாலையும், தலைக்கு வெள்ளெருக்கு மாலையும் சாத்தப்படும். மகோற்சவ காலத்தில் மாத்திரமல்லாது நாளாந்தம் அதிகாலையிலே பல பூமாலைகளையும் நிறையப் பூக்களையும் ஆலயத்திற்குக் கொண்டுவந்து அடியார்கள் கொடுத்து விடுவார்கள்.

"என்கடன்பணி செய்துகிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கமைய நமது ஆலயத்திலே நடைபெறும் செயற்பாடுகளில் பெரும்பாலானவை தொண்டாகவே செய்யப்பட்டு வருகின்றன. பல

போத்தல் பால்தரும் பசுமாட்டினை மகோற்சவ காலத்திற் கோயிற் சூழலிலே கொண்டுவந்து கட்டிவிட்டு நாள்தோறும் காலை, மாலை தூய்மையான முறையில் அந்தப் பாலினைக் கறந்து அபிஷேகத்திற்குக் கொடுக்கும் தொண்டு இன்றும் நடைபெற்று வருகின்றது. யாகக் கிரியைகளுக்கு வேண்டிய சமித்துக்களைக் கடையிலேயே பெற்றுக்கொள்ளும் மரபு இங்கு இல்லை. எல்லா இடமும் தேடி அலைந்து சீரான முறையிற் சமித்துக்களை கொண்டு வந்து பக்குவப்படுத்தி யாகக் கிரியைகளுக்குக் கொடுப்பதை இங்கே காணலாம்.

தெய்வத் தமிழாகிய திருமுறைக்கு இங்கு முக்கிய இடம் வழங்கப்பட்டு வருகின்றது. திருமுறைச் செல்வர்களுக்குக் கோயிலமைக்கப்பட்டு மகோற்சவத்தின் ஆறாம் திருவிழா திருமுறை விழாவாகவே பல்லாண்டு காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. திருமுறை விழாவிற் சுவாமி வீதிவலம் வரும்பொழுது திருமுறை ஒலி மட்டுமே வீதியெல்லாம் கேட்கும். அனைவருடைய நாவும் தெய்வத் தமிழைப் பக்தியோடு உச்சரிக்கும். கொடிக்கவி பாடிக் கொடியேற்றுவதும், திருப்பல்லாண்டு பாடி தேர் இழுப்பதும் இங்கு பல்லாண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது. தமிழிசை ஆகிய பண்ணிசையை யாழ்ப்பாணத்திலேயே அறிமுகப்படுத்தி வைத்த பெருமை இசைவல்லார் செல்லத்துரை அவர்களுக்கே உண்டு. குப்பிழான் கிராமத்திலே பிறந்த இவருக்குக் கற்பக விநாயகனே குலதெய்வம். இவரை குப்பிழான் செல்லத்துரை என்றே பலரும் அன்போடு அழைப்பார்கள். கற்பக விநாயகர் ஆலயத்திலே இவர் பண்ணிசை வகுப்புக்களை நடாத்திப் பலர் பண்ணோடும் பக்தியோடும் தெய்வத் தமிழ்ப் பாடங்களைப் பாட வழிகாட்டினார். இவரைத் தொடர்ந்து கட்டுவனைச் சேர்ந்த ஓதுவார் V.T.V.சுப்பிரமணியம் எங்கள் ஆலயத்தில் 15 ஆண்டுகள் பண்ணிசை வகுப்புக்களை நடாத்தி வந்தார். விழாக் காலங்களிற் சுவாமிக்குப் பின்னால் திருமுறைப் பாடல்கள், பஜனைப் பாடல்களைப் பாடும் மரபு இங்கு தொன்றுதொட்டு நிலவி வருகிறது.

இங்கு சமயப் பிரசங்கம் செய்யும் மரபு பல்லாண்டு காலமாகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நெருக்கடியான கால கட்டத்திலும் சமயப் பிரசங்க மரபைப் பேணி நடாத்திய ஒரே ஆலயமாகக் கற்பக விநாயகனின் ஆலயம் மிளிர்கிறது. ஈழத்தின் தலைசிறந்த சைவத்தமிழ் அறிஞர்கள் அனைவரும் இங்கு உரையாற்றியுள்ளார்கள். திருமுருக கிருபானந்தவாரியார், அமெரிக்காவின் ஹவாய் மாநிலத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமிகள் போன்ற பலரும் இங்கு உரையாற்றி உள்ளார்கள். 1984 ஆம் ஆண்டில் திருமுறை மாநாடு இரண்டு நாட்கள் இந்த ஆலயத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பெரிய புராணம், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகிய மூன்று புராணங்களும் வருடம்தோறும் நியமம் தவறாது இங்கு படிக்கப்பட்டு வரும் சிறப்பினைக் காணலாம். கந்தஷஷ்டி காலத்திற் கந்தபுராணம் சூரபன்மன் வதைப் படலமும், விநாயகஷஷ்டி விரத காலத்தில் நாளாந்தம் பிள்ளையார் கதை படிப்பதும் மரபாகும். தொண்டு வேறு: தொழில் வேறு. ஒரு செயலைச் செய்து விட்டுப் பணத்தை எதிர்பார்த்தால் அது தொழில். பலன் எதுவும் எதிர்பாராமல் ஈஸ்வர அர்ப்பணமாகப் பணியைச் செய்வதுதான் தொண்டு. எங்கள் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் தொண்டர்களாவும், பக்தர்களாகவுமே காணப் படுகிறார்கள். கற்பகன் சந்நிதிதானத்திற் பலன் கருதாமற் பணி செய்யும் தொண்டர்களை அவன் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை எங்கள் கிராமத்து அடியவர்களிடம் வேரூன்றி உள்ளது.

நம்பினார்க்கு அருள் செய்யும் கற்பகன் தன்னை நாடி வந்து வணங்கும் அடியார்களின் வினைகளை வேரறுத்து இம்மையிலே சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வும், மறுமையிலே சிவஞான முத்தியும் வழங்குகிறான். அடியார்களே! பேசும் தெய்வமாக நின்று பேரருள் செய்கின்ற கற்பக விநாயகனின் திருத்தலம் நோக்கி வாருங்கள். அவனுடைய திருவருளுக்குப் பாத்திரமாகுங்கள்.

நாவும் நல்வாழ்க்கையும்

மனிதனுடைய உடலில் உள்ள உறுப்புக்களில் மிகவும் அவதானமாகப் பேண வேண்டிய உறுப்புக்கள் சில உண்டு. இதயம், நுரையீரல், சிறுநீரகம், கண், இரைப்பை, தலை என்பன அவற்றில் முக்கிய இடம்பெறுகின்றன. இதயம் சீராக இயங்கினால் தான் உடம்பில் இரத்த ஓட்டம் சரியாக இருக்கும். நுரையீரல் ஒழுங்காக வேலை செய்யாவிட்டால் சுவாசிப்பது சிரமமாகி விடும். சிறுநீரகம் சரியாகச் செயற்படாவிட்டால் உடலில் உள்ள கழிவு நீர் வெளியேறுவதில் தடை ஏற்படும். கண் பார்வையை இழந்தால் காட்சியால் பெறும் அறிவு முற்றாகத் தடைப்பட்டு விடும். ஆரோக்கியமற்ற உணவுகளை உள்ளே செலுத்தினால் இரைப்பை உடலில் பல சங்கடங்களைக் கொடுக்கும். "எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்" என்பது பழமொழி. தலையின் உள்ளே இருக்கும் மூளையில் பழுது ஏற்பட்டால் மனிதனின் நடத்தைக் கோலங்களே மாறிவிடும்.

மேற்கூறிய உறுப்புக்களால் ஏற்படும் பாதிப்பு தனி மனிதனைச் சார்ந்ததாகவே இருக்கும். ஆனால் உடல் உறுப்புக்களில் ஒன்றாகிய நாக்கினால் ஏற்படும் பாதிப்பு பல விபரீதங்களைத் தோற்றுவிக்கும். பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தும். குடும்பம், அயல், உறவுகள், நண்பர்கள் ஆகியோரிடம் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணியாக இருக்கும் உறுப்பு நாக்கே ஆகும். இதனால் தான் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் மனிதன் வேறு எவற்றைக் காக்கா விட்டாலும் நாவைக் காக்க வேண்டும் என்கிறார். காக்கத் தவறினால் சொற் குற்றத்துக்கு ஆளாகித் துண்பப்பட வேண்டும் என்கிறார்.

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு

திருக்குறள் - 127

ஒவ்வொரு மனிதனும் செய்யக் கூடிய அடிப்படை அறங்கள் எவை என்பதைத் தவயோகி திருமூலநாயனார் தான் அருளிய தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்திலே தெளிவாகக் கூறியுள்ளார்.

தினந்தோறும் வழிபாடு செய்யும் போது ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது, "கோமாதா எங்கள் குலமாதா" என்று போற்றுகின்ற பசுவிற்கு ஒரு பிடி உணவு கொடுப்பது, உண்ணும் உணவில் ஒரு கைப்பிடியைத் தானமாக வழங்குவது, பிறரிடம் கடுஞ் சொல் பேசாமல் இனிய வார்த்தைகளைப் பேசுவது ஆகியன சிறந்த அறங்கள் எனத் திருமந்திரம் கூறுகிறது.

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

நாளாந்த வாழ்க்கையைத் திட்டமிட்டு வாழ்பவர்கள் தாம் உழைக்கின்ற பணத்தை மிகச் சிக்கனமாகச் செலவு செய்வார்கள். "காலம் நம் கையில் கட்டுண்டு கிடவாது" என்பதை உணர்ந்த அவர்கள் நேரத்தையும் சரியாகப் பயன்படுத்துவார்கள். ஆனால் தமது உடல் உறுப்புக்களில் ஒன்றாகிய நாவைச் சரியாகப் பயன்படுத்தாமல் தவறாகப் பயன்படுத்திப் பல துன்பங்களை விலைக்கு வாங்குவார்கள்.

மற்றவர்களுடன் உரையாடுகின்ற பொழுது இனிய வார்த்தைகளைப் பேசினால் அவர்களின் இதயம் குளிரும். வன்சொல்லால் பேசினால் மனம் வாடி வதங்கி விடும். இனிய வார்த்தைகள் கொந்தளிக்கின்ற குமுறுகின்ற உள்ளங்களைக் குளிர்விக்கும். பிறரை வருத்தாத இனிய சொல் மறுமையிலும் இம்மையிலும் இன்பத்தை தரும்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்

(திருக்குறள் - 98)

சிலருடைய சிந்தனைக்கும் வார்த்தைக்கும் இடையே தொடர்பு எதுவும் இருப்பதில்லை. கறந்த பால் முலைக்கு ஏறாதது போல நாவால் பேசிய வார்த்தைகளை மீளப் பெற முடியாது. விருந்தினரை உபசரிக்கும் பொழுது முகம் மலர்ந்து அன்பாக உபசரிக்க வேண்டும். அன்பில்லாமல் கொடுக்கும் உணவு நஞ்சாக

மாறிவிடும். வார்த்தைகளால் வைது கொண்டு ஒருவருக்கு உணவு அளிப்பதிலும் பார்க்க உணவு கொடுக்காமல் விடுவதே நல்லது என்பதை "ஏசியிடலின் இடாமையே நன்று" என ஔவையார் குறிப்பிடுகின்றார்.

நமது சமயப் பண்பாட்டில் மனையறத்தின் வேராக விளங்குபவர்கள் மாதரசிகள். பெரியபுராண அடியார்களில் பெண் அடியார்களாகக் காணப்படும் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகிய மூவரும் மனையறம் பேணிய மங்கையர்களாகத் திழைந்தார்கள். பத்தாவிற்கேற்ற பதிவிரதையாக வாழ்ந்தார்கள். இந்து தர்மம் காட்டும் இல்லற தர்மத்திற்கு உதாரணம் காட்டக்கூடிய மங்கையர்களாகத் திகழ்ந்தார்கள்.

மனையறத்தின் ஆணி வேரையே அறுக்கும் பெண்களாக நாவடக்கம் இல்லாதவர்களாக இருப்பவர்களுடன் வாழ்வதிலும் பார்க்கப் பேயோடு கூடி வாழலாம் என்பதை

"எதிர்பேசும் மனையாளில் பேய் நன்று"

எனத் தமிழ் மூதாட்டியின் பாடல் குறிப்பிடுகிறது.

மற்றவர்களுடன் இனிய வார்த்தைகளைப் பேசுவதற்கும் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற வாக்கியத்திற்கு அமைய நாம் அறிந்து உணர்ந்த ஆன்மீக ஞானத்தை பக்குவமுள்ளவர்களுக்கு ஞான யாகமாகக் கூறுவதற்கும் நமது நாவை உபயோகிக்கலாமல்லவா?

சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செல்வர்களாகிய அருளாளர்கள் தந்த தோத்திரப் பாடல்களை நாளும் நமது நாவினால் உணர்ந்து ஓத வேண்டும். "வாயே வாழ்த்து கண்டாய்" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு அமைய "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்ற அருணகிரிநாதரின் மந்திர மொழிக்கு ஏற்ப நாம் அனைவரும் நமது நாவினால் இறைவன் புகழ் பாடுவோமாக.

மூவகைப் பலம்

இந்த மண்ணிற் பிறந்த மனிதனின் வாழ்வு பூரணத்துவம் பெறுவதற்கு மூன்று வகையான பலம் மிகவும் அவசியமாகும். உடற்பலம், மனோபலம், ஆத்ம பலம் என்பன அவையாகும். உடல் ஆரோக்கியம் உடையதாக இருந்தால் மட்டுமே மனிதனால் தான் நினைத்தவற்றைச் சாதிக்க முடியும். நோய்வாய்ப்பட்ட உடம்பு, மனிதனின் சிந்தனைக்கும், சாதனைக்கும் என்றும் தடையாகவே இருக்கும் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. "கழுபிணியிலாத உடல்" வேண்டும் என்று அபிராமிப்பட்டரும் அம்பிகையை வேண்டுகின்றார். ஆனால், வெறும் உடற்பலம் மட்டும் அமைந்து விட்டால் அது மிருகபலமாக மாறிவிடும். உடற்பலத்தை மட்டும் நம்பி வாழ்பவர்களின் நடத்தைகள் மிருகங்களின் நடத்தைகளிலும் பார்க்க மோசமாக இருப்பதை நாம் உலகியலிற் காணலாம். உடற் பலத்தை மட்டும் நம்புகிறவர்கள் மனிதர்களில் விலங்குகளாக வாழ்நாளை வீழ்நாளாக்கி அலைந்து திரிகிறார்கள்.

மனோபலம் இல்லாதவர்களால் வாழ்வில் எதையுமே சாதிக்க முடியாது. எத்தகைய சோதனைகள், வேதனைகள் வந்தாலும் எடுத்த காரியத்தைச் செவ்வனே நடத்தி நிறைவு செய்யும் ஆற்றல் இவர்களிடம் இல்லாமற் போய்விடும். "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை" என்பது கம்பனுடைய வாக்கு. ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் நின்று பேசும் தெய்வத்தின் குரல் அவனது மனச்சாட்சியே என்று இந்துக்களின் சட்ட நூலாகிய மனு தர்மசாஸ்திரம் குறிப்பிடுகின்றது. மனச்சாட்சியை மதித்து நடக்காதவர்களின் மனோ பலமும் திசை மாறிச் சென்றுவிடும். தன் மனம் அறிந்த ஒன்றைப் பிறர் அறியவில்லை எண்றெண்ணிப் பொய் சொல்லக்கூடாது. அவ்வாறு கூறுபவனை அவனுடைய மனச்சான்றே தண்டிக்கும் என்பதை

"தன் நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்" ***-திருக்குறள் 293***

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது. அம்பிகையினுடைய கடைக்கண் பார்வை கிடைத்துவிட்டால்

தனம், கல்வி, தெய்வவடிவு, நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் என்பவற்றுடன் தளர்வறியா மனமும் ஏற்படும் என்று அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியிலே குறிப்பிட்டுள்ளார்.

மனத்திண்மை உடையவர்களாக இருந்தால், நினைத்ததை நினைத்தபடி அடைகின்ற வாய்ப்பைப் பெறுவார்கள்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" *-திருக்குறள் 666*

என்பது திருக்குறள்.

எண்ணிய காரியத்தை நிறைவேற்ற வேண்டும். நல்லவற்றை எண்ணுதல் வேண்டும். உறுதியான திண்ணிய நெஞ்சம் வேண்டும். தெளிந்த நல் அறிவும் வேண்டும் என அன்னை பராசக்தியிடம் மகாகவி பாரதியார் வேண்டுதல் செய்வதை

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

என்ற அவருடைய பாடல் குறிப்பிடுகின்றது. சில மனிதர்கள் தாம் நினைத்த காரியம் நல்லதோ கெட்டதோ என்பதைப் பற்றிச் சிந்திக்காமல் "நினைத்ததை முடிப்பவன் நான், நான் " என்ற அகங்காரத் திமிரோடு செய்து முடிப்பார்கள். நான் என்ற அகங்காரமும் எனது என்ற மமகாரமும் இவர்களிடம் தலை தூக்கி நிற்கும். "கோனா கியான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டும்" என்று திருவாசகம் குறிப்பிடும் வாக்கினைப் போன்றே செயற்படுவார்கள்.

உடற் பலமும் மனோபலமும் மனிதனின் சிறப்பான வாழ்விற்குத் தேவையான சக்திகளாகவே திகழ்கின்றன. ஆனால், இவை இரண்டும் சரியாகப் பயன்படுவதற்கு ஆத்மபலம் மிகவும் அவசியமாகும். தெய்வீகசக்தி நமக்குள்ளே இருந்து வழிகாட்டா விட்டல் நமது உடற்பலம், மனோபலம் ஆகிய இரண்டும் திசை மாறிச் சென்றுவிடும்.

"குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழி விழுமாறே"

என்ற திருமந்திரவாக்கிற்கு அமைய ஆத்மபலம் இல்லாது உடற்பலமும், மனோபலமும் மட்டும் இருந்தால் குருட்டாட்டம் ஆடிக் குழியில் விழும் பரிதாபகரமான நிலைதான் ஏற்படும்.

மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் தூய்மையாகச் செயற்பட்டால் நாம் செய்கின்ற காரியங்கள் அனைத்தும் சித்தியாகும். இதனைத் "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்" எனத் தாயுமான சுவாமிகள் தனது பாடலிற் குறிப்பிடுகிறார்.

இறையருளால் ஆத்ம பலத்தை அகத்திலே பெற்று விட்டவர்கள் எதற்கும் அஞ்சுவது இல்லை. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்ற உறுதிப்பாடு இவர்களிடம் தோன்றிவிடும். உடலைச் சிவபோகமாக மாற்றி, கள்ளப் புலன்கள் ஐந்தையும் ஞானப் புலன்களாக மாற்றி மனதைச் சிதறவிடாமல் ஒரு நிலைப்படுத்தி வாழ்பவர்களின் அகத்திலே சிவம் பிரகாசிக்கும். சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கின்ற உயர்நிலை ஏற்பட்டுவிடும். ஒவ்வொருவரும் ஆத்ம பலத்தைப் பெறுவதற்கு வழிகாட்டும் திசைகாட்டிகளாக நமது அருளாளர்கள் தந்த அனுபூதி வாசகங்களாகிய தெய்வத் திருமுறைகள் காணப்படுகின்றன. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற பெரு நோக்கோடு ஞானச்செல்வர்கள் நமக்குத் தந்த பாடல்கள் நமக்கு ஆத்ம பலத்தை ஊட்டி நம்மை மிருக நிலையில் இருந்து மீட்டுத் தெய்வீக நிலைக்கு உயர்த்தும் திசைகாட்டிகளாக உள்ளன. "அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்" என்றே மணிவார்த்தை யாகிய திருவாசகமும் கூறுகின்றது. அகத்திலே மெய்ஞ்ஞான உணர்வினைத் தோற்றுவிக்கும் அருளாளர்கள் தந்த ஞானப் பாடல்களை ஓதி உணர்வதுடன் மெய் அடியார் கூட்டத்துடன் இணைந்து இருப்பதுவும் ஆத்ம பலத்தை நாம் அடைவதற்குத் துணையாக இருக்கும். உடற்பலம், மனோபலம், ஆத்மபலம் ஆகிய மூன்றையும் ஒருங்கே பெற்றுவிட்டால் மானிடப்பிறவி எடுத்ததன் பலனை நாம் அடைந்து விடுவோம். பிறவி நோய் நீங்கிச் சிவ கதியும் கிடைத்துவிடும்.

வாக்கும் வாழ்வும்

"இன்றைய நமது சமுதாயத்தில் வாக்கும் வாழ்வும் ஒருமித்து வாழ்பவர்களைக் காண்பது மிக அரிது. நமக்கு இறைவனால் தரப்பட்ட கருவி கரணங்களை ஒழுங்காகப் பேண வேண்டும் என்பதிற் பலரும் தவறி விடுகிறார்கள். நாம்பெற்ற கல்விக்கும், நமது நாளாந்த வாழ்க்கைக்கும் இடையில் தொடர்பு இல்லாத அவலநிலை தோன்றியதற்கான காரணம் யாது?

1945 ஆம் ஆண்டு தொடக்கம் இலவசக்கல்வி நமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதால் எழுத்தறிவு உள்ளவர்களின் வீதம் 90ஐத் தாண்டிவிட்டது. பெண்களின் கல்வி அறிவும் உயர்ந்த நிலையிற் காணப்படுகிறது. ஆரம்பக் கல்வியில் இருந்து க.பொ.த (சாதாரணம்) வரை எல்லா மாணவர்களுக்கும் அவர்களுடைய சமயம் கட்டாய பாடமாகப் போதிக்கப்படுகிறது. பல்கலைக் கழகங்களிற் சமயம் சார்ந்த துறைகளில் உயர் கல்வியினை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் ஒவ்வொரு சமயத்தவரும் வழிபடுவதற்குரிய வழிபாட்டுத் தலங்கள் செறிந்து காணப்படுகின்றன. வழிபாட்டுத்தலங்களிற் சமய போதனைகளும் இடம்பெறுகின்றன. எல்லாச் சமயப் பிரிவினராலும் அறநெறிப் பாடசாலைகள் நாடு முழுவதும் நடாத்தப்படுகின்றன.

சமயக் கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும் நமது நாட்டில் உள்ள மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரில் பலரிடம் நெறிபிறழ்வான ஒழுக்கக்கேடான நடத்தைகள் காணப்படுவதற்கு யாது காரணம் என நமது சமயத் தலைவர்கள் அனைவரும் சிந்தித்து அதற்குப் பரிகாரம் காண வேண்டும். நமது மாணவர்கள், இளைஞர்களில் ஒருவரும் ஆகாயத்தில் இருந்து பரசூட்டில் வந்து, இந்த மண்ணில் குதிக்கவில்லை. எங்களுடைய மண்ணில் வாழும் பெற்றோருக்குப்

பிள்ளைகளாகப் பிறந்து, இந்தச் சூழலிலேயே வாழ்கின்றார்கள். இவர்களின் தவறான நடத்தைகளுக்குப் பெற்றோர், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், சமய சமூக நிறுவனங்களை வழிநடாத்துவோர் ஆகிய அனைவருமே கூட்டுப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு இன்று வெறும் ஏட்டுக்கல்வியே போதிக்கப் படுகிறது. மாணவர்கள் ஏற்றப்படும் தீபங்களே ஒழியத் திணிக்கப்படும் பாத்திரங்கள் அல்ல என்பதைப் பாடசாலை ஆசிரியர்களும் சிறப்பாகத் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும், உணர்ந்து கற்பிக்க வேண்டும். பல்கலைக் கழகங்கள் வெறுமனே பட்டங்களை வழங்கும் தொழிற் சாலையாக இயங்கக் கூடாது. அறவிழுமியங்களைப் பேணுகின்ற ஒழுக்கம் நிறைந்த பண்புள்ள மனிதர்களை உருவாக்கும் கேந்திர நிலையங்களாக மாற வேண்டும். தான் பெற்ற அறவிழுமியங்கள் சார்ந்த கல்வி தனது வாழ்க்கைக்குப் பயன்படாது என்ற நினைப்பு மாணவர்களிடம் தோன்றக் கூடாது.

வாக்கும் வாழ்வும் ஒருமித்துச் செயற்படுபவன் மனிதரில் தெய்வமாக மதிக்கப்படுவான். சிலர் பெரிதாகச் சொல்வார்கள். செயலில் எதுவும் இருக்காது. வேறு சிலர் வாழ்விற் பல திருகுதாளங்களைச் செய்வார்கள். ஆனால் வெளியில் தமது சுயரூபத்தை தெரியவிடாமல் இரகசியத்தைப் பேணுவார்கள். வாக்கும் வாழ்வும் ஒருமித்து வாழ்ந்து நமக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் அப்பர் பெருமான். இவரை "நடமாடும் கோயில்" என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் போற்றுகின்றார். திருத்தொண்டு நெறிக்கு இலக்கணமாக வாழ்ந்த அப்பர் பெருமான் தான் திருக்கோயிலிற் செய்த திருத்தொண்டுகளை மற்றைய அடியார்களும் செய்ய வேண்டும் என்பதற்காக அவற்றைப் பாடலிலே தந்திருக்கின்றார்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி"

என்ற பாடல் வரிகளும்,

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

என்ற பாடல்வரிகளும் இதனை எடுத்து விளக்குகின்றன.

கற்றபடி நடத்தல்தான் கல்வியின் பயன் ஆகும். கற்க வேண்டிய அனைத்தையும் தெளிவாக ஐயம் திரிபறக் கற்க வேண்டும். பல வகையான கல்வியையும் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. கற்றபடி வாழ்க்கையை நடாத்துதல் மிகவும் அவசியமாகும் என்பதையே

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக" ***- திருக்குறள் 391***

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது. முக்காலமும் உணர்ந்த மகா ஞானியாகிய திருவள்ளுவர் குறளின் இறுதியில் "அதற்குத் தக" என்ற இரு சொற்களை இணைத்துக் கல்வியின் பயன் எது என்பதைத் தெளிவாக்கி உள்ளார்.

ஆரம்ப வகுப்புக்களிற் கல்வி கற்கும் மாணவர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள். கள்ளம் கபடமில்லாதவர்கள். தமக்குக் கற்பிக்கும் ஆசிரியரின் வார்த்தைகளை ஆப்த வாக்கியமாக, வேத வாக்கியமாகவே நினைப்பவர்கள். பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சு விதைகளை விதைக்காமல் நல்ல சிந்தனைகளை விதைத்து விடவேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடம் காணப்படல் வேண்டும். ஆசிரியர் முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். நற்பண்புகளின் உறைவிடமாக ஆசிரியர் மிளிர வேண்டும். இன்றைய சிறுவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள், என்பதை

"ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே

நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகின்றார்"

எனக் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா தனது பாடலிற் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொருவருடைய பெருமைக்கும் சிறுமைக்கும் அவர் களுடைய செயல்களே காரணமாக அமைகின்றன.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்

கருமமே கட்டளைக்கல்" ***- திருக்குறள் 505***

என்றே செந்தாப் போதருடைய திருக்குறளும் கூறுகிறது.

வாக்கும் வாழ்வும் வேறுபடாது ஒருமித்த நிலையிற் செயற்படும் சமூகம் உருவாகுவதற்குச் சமயக் கல்வியே வழிகாட்டும். சமயம் என்பது ஒருவாழ்க்கை முறை: மனிதனை நெறிப்படுத்தி அவன் உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் சாதனம். சமயக் கல்வியைப் போதிப்பவர்களுக்குச் சமய பாடம் மட்டும் தெரிந்தாற் போதாது. சமய உணர்வும் வேண்டும். சமய உணர்வு உள்ளவர்கள் வாக்கும் வாழ்வும் ஒருமித்த நிலையிற் சமய போதனை செய்தால் ஆரோக்கியமான நெறிபிறழ்வு நடத்தைகள் அற்ற ஒழுக்கமான சமுதாயம் நம் நாட்டில் மலரும்.

மனம் கலியுகத்தில் உடலையே சார்ந்திருக்கிறது. ஆகவே உடலுக்குச் சுகம் தரும் செயல்களைச் செய்வதையே அது விரும்புகிறது. இறைவனை அடைய உடல் அபிமானம் அற்று இருக்க வேண்டும். அவ்விதம் உடல் அபிமானம் அற்று இருப்பது தான் தூய்மை. அந்தத் தூய்மை பெறத் தவம் செய்ய வேண்டும். ஆனால் தவம் செய்வதற்குப் போதுமான சக்தி பெரும்பாலோர் உடலிலும் உள்ளத்திலும் இருப்பதில்லை.

- சுவாமி விவேகானந்தர்

அன்பின் வலிமை

மக்களை ஒருவரோடொருவர் பிணைக்கும் மகத்தான சக்தியாக அன்பே திகழ்கிறது. இல்லறம் நடைபெறுவதற்கு அன்பே அடிப்படைக் காரணம். இல் வாழ்க்கையின் பண்பு அன்பு, அதன் பயன் அறம் என்பதை

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது. குடும்ப உறுப்பினரிடையே இருக்கும் இறுக்கமான பிணைப்பிற்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருப்பது ஒருவர் மேல் மற்றவர் கொண்டிருக்கும் தூய்மையான அன்பே ஆகும். அன்பிற்கு அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் போட முடியாது. அன்புடையார் படும் துன்பத்தால் ஒருவர்க்குத் தோன்றும் கண்ணீர் அவரது அன்பினை எல்லோரும் அறியக் காட்டிவிடும்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கண் நீர் பூசல் தரும்" ***- திருக்குறள் - 71***

இல்லற வாழ்க்கையில் இணைந்திருக்கும் காதலர்களிடம் ஒருவரை ஒருவர் உளமார நேசிக்கும் அன்பு இல்லாவிட்டால் குடும்ப வாழ்க்கையே பாலைவனமாகிவிடும். கொடிது எது? என்று கூற வந்த மூதாட்டி ஔவையார்.

"கொடிது கொடிது வறுமை கொடிது
அதனிலும் கொடிது இளமையில் வறுமை
அதனிலும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனிலும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனிலும் கொடிது இன்புற அவள் கையில் உண்பதுதானே"

எனப் பாடுகிறார். பாட்டின் இறுதியில் அன்பிலாப் பெண்டிர் ஒருவனுக்கு அமைந்தால் அதுவே அவனுக்குப் பெரிய துன்பம் என்கிறார். அன்பில்லாதவளின் கையினால் வாங்கி உண்பதுவே கொடியவற்றுள் எல்லாம் மிகவும் கொடியது என்கிறார்.

சக + உதரம் என்பது சகோதரமாயிற்று. ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளை நாம் சகோதரம் என்கின்றோம். சகோதர பாசம் என்பது மிகவும் வலிமையுடையது. ஒரு சகோதரம் படும் துன்பத்தைக் கண்டு மற்றைய சகோதரம் துடிக்கிறது. "தானாடாவிட்டாலும் தன் தசையாடும்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழியாகும். முருகப் பெருமானுடன் செய்த போரிலே பல இழப்புக்கள் ஏற்பட்டபொழுதும் கலங்காத சூரன், தன் தம்பி சிங்கமுகாசுரன் இறந்த பொழுது தேம்பித் தேம்பி அழுகின்றான். பொன்னை, நிலத்தை, புதல்வர்களை, மங்கையரை, வேறு உலகியல் செல்வங்களை இழந்தால் மனித முயற்சியால் மீண்டும் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் சகோதரத்தை இழந்தால் வாழ்வில் மீண்டும் பெறமுடியாது என்பதைப் பின்வரும் கந்தபுராணப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

"பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னை உளபொருளை எல்லாம் பெறலாகும்
என்னை உடைய இளங்கோவே இப்பிறப்பில்
உன்னை இனிப் பெறுவது உண்டோ உரையாயே"

தாய் தன் பிள்ளையில் வைக்கும் அன்பு பிரதிபலனை எதிர்பாராத அன்பாகும். ஒரு பிள்ளை தன் தாயில் வைக்கும் அன்பும் அத்தகையதே. தாயன்பிற்கு நிகராக எந்த அன்பினையும் கூற முடியாது. உலகப் பற்றுக்கள் அனைத்தையும் முற்றாகத் துறந்த பட்டினத்தடிகளாலேயே தாயன்பைத் துறக்க முடியாதிருந்த நிலையினை

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று"

என்ற அவருடைய பாடலில் இருந்து அறிய முடிகிறது.
இறைவனோடு அடியவன் வைக்கும் அன்பு தூய்மையானதாக இருத்தல் வேண்டும். காரைக்காலம்மையார் இறைவனிடம் இறவாத இன்ப அன்பையே வேண்டுகின்றார். தன் உள்ளத்தில் இறைவனை நினைந்து உருகுகின்ற இடையறா அன்பினைத் தந்து உதவுமாறு ஆடவல்லானாகிய நடராஜப் பெருமானிடம் மணிவாசகர் வேண்டுவதை

"ஆடு அகம் சீர் மணிக் குன்றே

இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே

நின்றுருகத் தந்தருள் எம் உடையானே"

எனத் திருவாசகம் குறிப்பிடுகிறது. வீரவாகுதேவர் முருகப் பெருமானிடம் வேறு எதனையும் வேண்டாது ஞானபண்டிதனின் அன்பை மாத்திரம் வேண்டி நின்றதை

"சால நின் அன்பையே வேண்டுவன் தமியேன்"

எனக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

அன்பின் முதிர்வு நிலையில் ஏற்படுவதுதான் பக்தி. அடியவன் பக்திவலை வீசினால் இறைவன் அதில் அகப்பட்டே தீருவான். "பக்தி வலையில் படுவோன் காண்க" எனத் திருவாசகம் இதனைக் குறிப்பிடுகின்றது. காந்தக்கல் இரும்புத் துகள்களைக் கவர்வது போலவும், படர்கொடியானது மரத்தை நோக்கிப் படர்வது போலவும் ஆற்றின் பிரவாகம் கடலை நோக்கி ஓடுவது போலவும், தர்ம பத்தினியாள் ஒருத்தியின் கற்பு அவள் நெஞ்சத்தில் குடிகொண்டவனைக் கவர்வது போலவும், பக்தன் ஒருவனின் பக்தி இறைவனை நோக்கி ஓடிக்கொண்டேயிருக்கும் எனச் சங்கரர் உண்மையான பக்திக்கு விளக்கம் கொடுக்கின்றார்.

பூரண சரணாகதியாகிய பிரபத்தி நிலையில் நின்று அடியவர்கள் வணங்கினால் இறைவனின் திருவருள் உடனே கிடைக்கும் என்பதற்கு மகாபாரதத்தில் பாஞ்சாலியின் பக்தி நிலை உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கைகளையும் மேலே தூக்கிய நிலையில் பாஞ்சாலி பூரண சரணாகதியாக கிருஷ்ண பரமாத்மாவைக் கூவி அழைத்தாள். கோவிந்தா, கிருஷ்ணா, பார்த்திபா, பரந்தாமா, கேசவா, கண்ணா, மாயவா, கோகுலா எனக் கதறி அழுதாள். துச்சாதனன் உரிந்த அவளது துகில் வண்ண வண்ணச் சேலைகளாய் வளர ஆரம்பித்தது.

வண்ண வண்ண சேலைகளாய் வளர்ந்தது

வளர்ந்தது வளர்ந்தது கண்டீர்!

என மகாகவி பாரதியார் தான் எழுதிய பாஞ்சாலி சபதத்திலே இதனைக் குறிப்பிடுகின்றார். கண்ணப்பனின்

பக்தியினைப் பெரியபுராணம் விதந்து கூறுகின்றது. கண்ணப்பனைப் போலக் கண்ணையே பிடுங்கிக் காளத்தி அப்பனின் கண்ணில் வைக்கின்ற உயர் பக்தி நிலை தன்னிடம் இல்லையேயென மணிவாசகர் குறிப்பிடுவதைக் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்ற திருவாசகத்தின் திருக்கோத்தும்பிப் பாடலில் காணலாம்.

அன்பு உள்ள இடத்தில்தான் உரிமை வரும் என்பது உலகியலில் நாம் அறிந்த உண்மை ஆகும். உண்மையான அன்பு இல்லாதவர்களிடம் நாம் உரிமையோடு பேசுவதில்லை. மணிவாசகர் இறைவனை அன்புடன் வழிபட்டமையால் உரிமையுடன் அவரிடம் வேண்டுவதை

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்

நானோ இதற்கு நாயகமே"

என்ற திருவாசகத்தின் குழைத்த பத்து வரிகளின் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

அன்பு தான் கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்கிறார் திருமூலர். அன்பும் சிவமும் வேறு என்பது அறிவிலிகளின் வார்த்தை, அன்பேசிவம் என்பதைப் பலரும் அறியாதிருக்கிறார்கள். அன்புதான் சிவம் என்பதை எல்லோரும் அறிந்துவிட்டால் பின்பு அவர்களே அன்புருவமான சிவமாய் அமர்ந்திருப்பார்கள் ஆனந்த வெள்ளத்தில் திளைத்து இருப்பார்கள்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

அறவாழ்வின் அவசியம்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் வாக்கு. மகத்தான பிறவியாகிய மானுடப் பிறவியைப் பெற்ற நாம் அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். "கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி" என்ற சித்த புருஷரின் வாக்கிற்கு அமைய மானிடர்களிற் பலர் தாம் எடுத்த பிறவியின் பயனை உணராமல் வாழ்ந்து மடிகின்றார்கள். தர்ம நெறி பிசகாமல் வாழ்பவனுடைய வாழ்க்கை என்றும் ஒளிமயமாகவே இருக்கும்.

"ஒவ்வொருவருடைய நாளாந்தச் செயற்பாடும் தெய்விகத் துலாக்கோலில் நிறுக்கப்படுகிறது" என்று கர்மக்கோட்பாடு கூறுகிறது. நாம் நாளாந்தம் செய்கின்ற செயல்கள் ஒவ்வொன்றுக்கும் விளைவு உண்டு. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்று பழமொழியும் இதைத்தான் உணர்த்துகிறது. "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுத்தாக்கம் உண்டு" என்றே விஞ்ஞானியான நியூட்டனின் மூன்றாவது இயக்க விதியும் கூறுகிறது. அறிவின் தவறான செயற்பாட்டினால் வாழ்விற் சீரழிந்தவர்கள் பலரைக் காணலாம். "விநாச காலே விபரீத புத்தி" (கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே) என்ற சுலோகமும் இதனை உறுதிப்படுத்துகிறது. அறிவு சரியாகச் செயற்படுவதற்கு அறவாழ்வே வழிகாட்டும் என இந்து சமயம் வலியுறுத்திக் கூறுகின்றது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அனுசரிக்க வேண்டிய தர்மம், சுவதர்மம் எனப்படும். உண்டு, உடுத்து, கண்டு, களித்துக் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று வாழ்வது சுவதர்மம் ஆகாது. "தர்மத்தைக் காத்தவனை அது காக்கும். கொன்றவனை அது கொல்லும்" என்று இந்துக்களின் சட்டநூலாகிய தர்ம சாஸ்திரமும் குறிப்பிடுகிறது. குருகுல கல்வி முறையில் அறத்தின் முக்கியத்துவம் பற்றிக் குரு தனது மாணவனுக்கு விளக்கிக் கூறியுள்ளார். வாழ்வில் அறநெறி தவறுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் குரு மாணவனுக்கு எடுத்துக் கூறினார். ஆனால்

இன்று பாடசாலைகள் உயர்கல்விக் கூடங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற் கல்வி கற்கும் மாணவர்கள் தங்கள் சுவதர்மத்தை உணரக் கூடியதான போதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. வெறுமனே வயிறு வளர்க்கும் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கும் போதனைகள் இடம்பெற்று வருகின்றன. தர்மத்தின் வலிமையை மாணவர்களுக்கு உணர்த்தாத கல்விச்சாலைகள் அனைத்தும் ஆரவாரம் பண்ணும் வெறும் சினிமாக் கொட்டகைகளாகவே காணப்படுகின்றன.

அறநெறி பிசகாது வாழ்வதற்கு நல் ஒழுக்கம் இன்றியமையாதது. சிறப்பான ஒழுக்கத்தையே அறம் என்று கூறலாம். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் அறத்தினைச் செய்தல் வேண்டும். மூன்றும் தூய்மையாக இருந்து செயற்பட்டால்தான் காரியசித்தி ஏற்படும். "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்" என்று தாயுமான சுவாமிகளும் தனது பாடலிற் குறிப்பிடுகின்றார். புறக்கரணங்கள் உட்கரணங்களைச் சுத்தி செய்வதே சுதர்மம். உட் காரணங்களில் மிக விசேடமானது மனம். மனம் சுத்தமானால் எல்லாக் கரணங்களும் சுத்தமாகும். 'மனமது சுத்தமானால் மந்திரம் செபிப்பதுண்டோ' என்ற பாடல் வரிகளும் இதனையே உணர்த்துகின்றன. சிந்தனை ஆரோக்கியமானதாக இருந்தால், சொல்லும் செயலும் தூய்மையுடையதாக அமையும். இதனையே 'நல்லவை எண்ணல் வேண்டும்' என்று மகாகவி பாரதியாரும் குறிப்பிடுகின்றார். மனத்திலே எவ்வித குற்றங்களும் தோன்றாமல் அவற்றைக் களைந்து விட்டால் அதுவே அறமாகும். எண்ணமே சொல்லுக்கும் செயலுக்கும் வித்தாக இருப்பதால் மனத்துக்கண் மாசில்லாதிருப்பது அனைத்திற்கும் அடிப்படை என்ற கருத்தையே

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" *- திருக்குறள் 34*

எனத் திருக்குறளும் கூறுகின்றது.

தர்மம் அழிந்து அதர்மம் மேலெழுகின்ற பொழுது இறைவனின் அவதாரம் இடம்பெறும் என்பதைக் கிருஷ்ண பரமாத்மா கீதையிலே அருச்சுனனுக்கு எடுத்துக் கூறுகின்றார்.

உ+ம் :

1. பாரதா, எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் மேலெழுகிறதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கின்றேன்.
2. நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் தர்மத்தை நிலை நாட்டுவதற்காகவும் யுகம், யுகம் தோறும் அவதாரம் செய்கின்றேன்.

நாட்டிலே தர்மம் தலை கீழாகும் போது அவதார புருஷர்கள் தோன்றுகிறார்கள். அவதார புருஷர்கள் ஈஸ்வரனால் அனுப்பப்படும் தூதுவர்களாவார்கள்.

ஒவ்வொரு தனிமனிதனும் அனுசரிக்க வேண்டிய அற ஒழுக்க நியதிகளைத் தர்ம சாஸ்திரங்கள் வகுத்துக் கூறுகின்றன. சகலருக்குமான பொதுவான தர்மம் சனாதன தர்மம் என்றும், ஒவ்வொரு யுகத்திற்குமுரிய தர்மம் யுக தர்மம் என்றும் ஆண்களுக்குரிய தர்மம் புருஷ தர்மம் என்றும் பெண்களுக்குரிய தர்மம் ஸ்திரீ தர்மம் என்றும் அழைக்கப்படும். அரசனுக்குரியது ராஜ தர்மம் என்றால் பிரஜைகளுக்குரியது பிரஜாதர்மம். ஒவ்வொரு வர்ணமும் அனுசரிக்க வேண்டிய தர்மம் வர்ண தர்மம், ஆச்சிரம நெறி நிற்பவன் அனுசரிக்க வேண்டிய தர்மம் ஆச்சிரம தர்மம் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மனிதனும் வாழ வேண்டிய நெறிமுறைகளைத் தர்ம சாஸ்திரங்கள் வகுத்துக் கூறினாலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொருவருக்குள்ளேயும் நின்று இயக்குகின்ற மனச்சாட்சியே தெய்வத்தின் குரலாக ஒலிக்கின்றது எனத் தர்ம சாஸ்திரம் கூறுகின்றது. 'வெளியுலகச் சட்ட திட்டங்களுக்காக உள்ளிருந்து கேட்கும் மனச் சான்றின் குரலை அமுக்கிக் கொன்று விடலாகாது' என்று மனு கூறுகின்றார்.

தருமம் என்று ஒரு பொருள் உள்ளது. ஒருவருக்கு இம்மையிலும் மறுமையிலும் பரிசுத்தமான இன்பம் கிடைக்க வேண்டுமானால், அது அந்தத் தருமத்தினாலேதான் உண்டாகும். பூர்வ புண்ணிய பலன்களினால், இம்மையிலே செய்யும் தவ விரதங்களினால் சான்றோர் இணக்கங்களினால் இது ஏற்படும் எனக் கந்தபுராணம் கூறுகிறது.

"தருமம் என்றொரு பொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்
அருமையின் வரும் பொருள் ஆகுமன்னதும்
ஒருமையினோர்க்கலால் உணர்தற்கொண்ணுமோ"

அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்றாகவே காட்சி தருகிறது. எண்ணம் அறத்தின் நிலையமைதி (Static) ஆற்றலாகும். சொல் இயக்க நிலை (Kinetic) ஆற்றலாகும். செயல் இயங்கும் நிலை (Dynamic) ஆற்றலாகும். அறம் காட்சிப் பொருளாக வெளிப்படுவதற்கு கருவியாக இருப்பது செயலாகும். இச்செயல் நிலையே ஒழுக்கமென உலகம் போற்றி வருகிறது. பிறருக்குக் கேட்டைத் தருகின்ற தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக்கூடாது. கேடு நினைப்பவனுக்கே கேடு விளையும் என்பதை

"மறுந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு" ***- திருக்குறள் 204***

எனத் திருக்குறளும் விளக்குகின்றது.

வினையின் பிணிப்பிலிருந்து விடுபடுவதற்கான வழிகளைச் சிவஞானசித்தியார் தெளிவாகக் கூறுகிறது. இறைவனை அடைவிக்கும் எழில் ஞான பூசைக்குரிய மார்க்கங்களைச் சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறுகிறது. ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத் துறவு, அறிவோடு அர்ச்சித்தல் ஆகியன இழுக்கிலா அறங்கள் எனச் சிவஞானசித்தியார் குறிப்பிடுகின்றது.

தனக்கும் பிறருக்கும் நன்மை தரும், ஆனந்தம் தரும் செயல்கள் ஒழுக்கம் எனப்படும். ஒழுக்கம் உயர்வைத் தருவதால் உயிரினும் மேலாக கருதப்படும். அறமே ஆண்டவன் அவனே அறம் வளர்க்கும் நாயகன். அற வாழ்வு வாழ்தலே இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தரும். அறத்தின் வடிவாக இருக்கும் இறைவனின் திருவடியுடன் ஆன்மா இணைவதற்கு, அறநெறி பிசகாத வாழ்வு நெறியே துணையாக அமையும்.

திருத்தொண்டு நெறி

இந்த மண்ணிலே பிறந்த ஒவ்வொருவரும் தாம் வாழ்வதற்கு ஏதாவதொரு தொழிலைச் செய்தே ஆக வேண்டும். உழைக்காமல் உண்பதை தண்டச் சோறு என்றே கூறுவார்கள். மூளை பலம் குறைந்தவர்களும் தங்கள் முயற்சியால் உழைப்பாளிகளாக மாறிவிடுவார்கள். உற்சாகத்துடன் உழைப்பவர்களுக்கே திருமகளின் கடாட்சமும் கிடைக்கும். 'முயற்சியுள்ள மானிடரில் சிங்கம் போன்றவனையே திருமகளும் அணைவாள்' என்றே பஞ்சதந்திரமும் கூறுகிறது. எத்தகைய சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அறிவு இருந்தாலும் சோம்பேறிகளுக்கு வாழ்வில் உயர்வு இல்லை. தன்னிடம் கைப்பொருள் ஒன்றும் இல்லையே என்று சோம்பிச் சும்மா இருப்போரைக் கண்டால் அவனுடைய அறியாமையை எண்ணிப் பூமாதேவி சிரிப்பாள் என்பதை

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள்நகும்" ***-திருக்குறள் 1040***

எனத் திருக்குறள் கூறுகிறது. பணத்தை எதிர்பார்த்துக் காரியங்கள் செய்வதைத் தொழில் எனவும் அப்படி எதையும் எதிர்பாராமல் பணியாற்றுவதைத் தொண்டு என்றும் அழைப்பர். மண்ணில் வாழும் மக்களாகிய நாம் தொண்டையும் தொண்டர்களையும் போற்றப் பழக வேண்டும். பெரியவற்றுள் எல்லாம் பெரியதாகத் தொண்டர்களின் பெருமையைத் தமிழ் மூதாட்டி ஔவையாரும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

"இறைவனோ தொண்டருள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை பேசவும் பெரிதே"

என்பதே ஔவையின் கூற்றும் ஆகும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனின் திருவடிகளை அடைவதற்குச் சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணை செய்யும் என்பதை

"மாறை நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயத் தானும் அரசனைத் தொழுமே"

எனச் சிவஞான போதத்தின் பன்னிரெண்டாம் சூத்திரம கூறுகிறது.

சூரியனுடைய வெப்பத்திலும் பார்க்கச் சூரிய வெப்பத்தை தன் அகத்தே இழுத்து வைத்திருக்கும் மணலின் சூடு அதிகமாக இருக்கும். இதேபோல இறைவனின் திருவருளிலும் பார்க்க இறையருளைப் பெற்று வைத்திருக்கும் சிவனடியார்களின் அருள் உயர்வானது என்பதைப் பின்வரும் நீதி வெண்பாப் பாடல் குறிப்பிடுகிறது.

"ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்பதரிதாமே – தேசுவளர்
செங்கதிர வன்முன்நின்றாலும் அவன்கிரணம்
தங்கு மணல் நிற்ப தரிதேகாண்"

தொண்டர்களின் பெருமையைக் கூறும் நூலாகிய பெரிய புராணத்திற்குத் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. அன்பும், பணிவும், பக்தியும், தொண்டும், தியாகமும், வீரமும் நிறைந்த சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல் ஆகையால் இதனை மாக்கதை என்றும் அழைப்பர். பெரிய புராண அடியார்களிற் பலர் சிவத்தொண்டும் பசுத் தொண்டும் செய்து வந்தார்கள். செய்த பணிகள் பலவற்றையும் பலன் எதுவும் கருதாமல் ஈஸ்வர அர்ப்பணமாகவே செய்தார்கள்.

திருத்தொண்டு நெறிக்கே இலக்கணமாக வாழ்ந்த அப்பர் பெருமானின் குறிக்கோள் வாசகம் 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்பதாகும்.

வாக்காலும் வாழ்வாலும் ஒருமித்து வாழ்ந்த அப்பரடிகள் தான் செய்த திருத்தொண்டுகளைத் தனது பாடல்களிலே தந்துள்ளார். பூவும் நீரும் கொண்டு இசையோடு கூடிய தமிழ்ப் பாடல்களால் நாளாந்தம் இறைவழிபாடு செய்து வந்த நிகழ்வினை அப்பர் பெருமான்

"சலம்புவொடு தூபம் மறந்தறியேன்
தழிழோடிசை பாடல் மறந்தறியேன்"
எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

அப்பர் பெருமான், தானே நடமாடும் கோயிலாகத் திரிந்தார் எனச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகின்றார். இவருடைய கனிந்த உள்ளத்தில் இருந்து வந்த பாடல்கள் கல்மனத்தையும் கனிந்துருகச் செய்பவை. இவரைப் 'பதிகச் செஞ்சொல் மேய செவ்வாய்' எனச் சேக்கிழார் பெருமானும் 'ஞானப்பாடல் தொடையறாச் செவ்வாய்' என மாதவச் சிவஞான சுவாமிகளும் போற்றுகின்றார்கள்.

நாவுக்கரசர் பெருமான் கையில் உழவாரம் ஏந்திப் புல் பூண்டுகளைச் செதுக்கி ஆலயங்களில் சிவப்பணி செய்து வந்தார். சிவக்கோலத்தோடு கண்களில் இருந்து அருவி நீர் சொரிய மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறை பணியே செய்தார். உலக மக்கள் அனைவரும் சிறப்புடன் அமைதியாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருத்தொண்டு செய்தார் என நாவுக்கரசரின் சிவக்கோலத்தை சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திலே சித்திரிக்கின்றார்.

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகும் திருவாயில் நீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணி செய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

சிவனடியார்களின் பசிப்பணி போக்குதலை உயர்ந்த அறமாகக் கொண்டு தொண்டு செய்த அடியார்கள் பலரைப் பெரிய புராணத்திலே காணலாம்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்"

என்ற சேக்கிழார் பெருமானின் வாக்கிற்கு இலக்கணமாகப் பல சிவனடியார்கள் செயற்பட்டார்கள். அடியார்களுக்கு அன்னம் இடும் பணியை ஆற்றி வந்த இளையான் குடிமாறநாயனார் வறுமை வந்துற்ற போதும் தாம் செய்து வந்த திருத்தொண்டிலிருந்து

வழுவவில்லை. இரவு நேரம் பசித்து வந்த சிவனடியார் ஒருவருக்கு உணவு கொடுப்பதற்காக, வயலிலே விதைத்து வந்த விதை நெல்லை எடுத்து வந்து அமுதாக்கினார். சிறு பயிராகிய பசளிக் கீரையை இருட்டிலே தடவிப் பிடுங்கிக் கறியமுதாக்கினார். பசளிக் கீரையைப் பறிக்க வந்த வரலாற்றைக் கூற வந்த சேக்கிழார் பெருமான், இளையான் குடிமாற நாயனார் பசளிக் கீரையை மட்டும் பறிக்கவில்லை. தனது பாச வினைகளையும் வேரோடு களைந்தார் என்பதைக்

"குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழி முதல்பறிப்பவர் போலப் பறித்தவை கறிக்கு நல்க"

எனக் குறிப்பிடுகின்றார்.

தொண்டர்களுக்கும் பக்தர்களுக்கும் உரிய இடமே ஆலயமாகும். மிண்டு மனத்தவர்கள் எவருக்கும் ஆலயங்களில் இடமில்லை என்பதை

"மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்"

எனச் சேந்தனார் பெருமானும் திருப்பல்லாண்டில் கூறுகின்றார். இன்று நமது ஆலயங்களில் தொண்டு செய்பவர்களைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. தொழில் செய்பவர்களே மிகுதியாகக் காணப்படுகின்றார்கள். நமது சமூகமும் தொழில் செய்பவர்களுக்குக் கொடுக்கின்ற மதிப்பைத் தொண்டர்களுக்குக் கொடுப்பதில்லை. அதிகாரத்திற்கும், பணபலத்திற்கும், வெளிவேடத்திற்கும் மதிப்புக் கொடுப்பதைத் தவிர்த்து உண்மையான தொண்டர்களைப் போற்றி மதித்து வணங்குவோமாக இருந்தால் நமது ஆலயங்கள் அனைத்திலும் தெய்வீக ஒளி சிறப்பாகப் பிரகாசிக்கும், யுத்த பூமியாக இருந்த நமது பிரதேசம் மீண்டும் சிவபூமியாக மாறும்.

வாழ்வில் நிதானம்

மானிடப்பிறவி எடுத்து வாழ்கின்ற நமக்கு நமது செயற்பாடுகளில் நிதானம் வேண்டும். உண்பது, உழைப்பது, ஓய்வெடுப்பது, மற்றவர்களுடன் உரையாடுவது போன்ற சகல விடயங்களிலும் ஒழுங்குமுறை தேவை. சிலர் பிறவி முதலே முன் கோபிகளாகவும், வேறு சிலர் சிந்தித்துச் செயற்படுபவர்களாகவும், சிலர் ஆரம்பம் முதற் சோம்பலின் ஆதிக்கத்தில் உள்ளவர் களாகவும் இருப்பதை நாம் காண்கின்றோம். இவைதான் முறையே ராஜசம். சாத்வீகம், தாமஸம் ஆகிய முக்குணங்களும் ஆகும்.

உயிர்வாழ்வதற்கு உடலுக்கு உணவு அவசியமாகும். நாம் உண்ணும் உணவு நம் உடலுக்குச் சக்தியைக் கொடுப்பதோடு மனதையும் பாதிக்கிறது. நமது மனம் எவ்வாறு செயற்படுகிறதோ அந்த முறையில்தான் நம் சக்தியும் உபயோகப்படுகிறது. உடல் பலமாக இருப்பதற்கு ஊன் உணவு அவசியம் என்ற கருத்துச் சிலரிடம் நிலவுகிறது. ஆனால் மரக்கறி உணவே மனித உடலிற்கும், உள்ளத்திற்கும் சிறப்பானது என்பதை இன்று அறிவியலாளர்கள் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மேற்கத்தைய நாடுகளிற் பலர் தாமாகவே விரும்பிச் சைவ உணவிற்கு மாறி வருகிறார்கள். ஆனால் நம்மவர்களிற் பலருக்கு ஊன் உணவு இல்லாவிட்டால் உணவில் விருப்பமின்மையே ஏற்படுகிறது. இறந்த உயிர்களைப் புதைக்கும் இடத்தைச் சுடுகாடு என்கிறோம். மிருகங்களைக் கொலை செய்து உயிர்போன பின்பு அதன் ஊண் உடலைப் பதப்படுத்தி உணவாக நம்மவர்களிற் பலர் உண்கிறோம். இறந்த உயிர்களைப் புதைக்கும் புதைகுழியாகவே நமது உடலில் உள்ள வயிறும் இரைப்பையும் மாறுகின்றன. இறைவன் வீற்றிருக்கும் கோயிலாகிய இந்த உடலை நாங்களே சுடுகாடாக மாற்றுகின்றோம். ஊன் உணவினை உண்பதால் ரஜோகுணம் அதிகரித்துக் காணப்படும். பழைய உணவுகள், புளித்துப் போன உணவுகளை உண்பதால் தமோ குணம் விஞ்சி நிற்கும். மாமிசக் கலப்பே இல்லாத மரக்கறி, தானியங்கள், பால் என்பவற்றை உண்பதாற் சாத்வீக குணம் மேலோங்கி நிற்கும்.

தூய்மையான உணவு மாத்திரமல்லாது உண்ணும் அளவிலும் கவனம் வேண்டும். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழி இதையே உணர்த்துகிறது. உணவை உண்பதில் நேரக் கட்டுப்பாடு வேண்டும். உணவுப் பிரியர்களாக மாறி உடலில் நோய்களை வரவழைக்கக் கூடாது. அளவு அறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்திருக்கும். அளவில்லாமல் நினைத்த போதெல்லாம் உண்கிற பெருந்தீனிக்காரரிடம் நோயும் நீங்காது குடிகொண்டிருக்கும் என்பதைத் தெய்வப் புலவரின் திருக்குறள் தெளிவாக விளக்குகிறது.

"இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம் போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்" - *திருக்குறள் 947*

ஒவ்வொரு மனிதனிடமும் தன்னிடம் இருக்கும் ஆற்றலைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு ஊக்கம் அவசியமாகும். சுடர்மிகு அறிவு பிரகாசிப்பதற்கு வல்லமை வேண்டும். சக்தி உபாசகராகிய மகாகவி பாரதியார் அறிவோடு ஆற்றலையும் தரவேண்டுமென்று அம்பிகையிடம் உரிமையுடன் வேண்டுகின்றார்.

"நல்லதோர் வீணைசெய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே"

ஒருவனுக்கு உள்ள வலிமையையெல்லாம் அவன் பெற்றிருக்கின்ற ஊக்கமே ஆகும். ஊக்கம் இல்லாதவன், உருவில் மனிதனைப்போல இருந்தாலும் அவன் மரமாகவே காட்சி தருவான்.

"உரமொருவற்கு உள்ள வேறுக்கை அஃதில்லார்
மரம் மக்களாதலே வேறு" - *திருக்குறள் 600*

'தூயலை துணிந்த போது பழிவந்து தொடர்வதில்லை' என்று கம்பன் வாக்கிற்கு அமையக் காலம் தாழ்த்தாது எடுத்த காரியத்தைச் செய்து முடித்தல் வேண்டும். காலந்தாழ்த்தல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகிய நான்கும் அழிவைத் தேடிப்போக நினைப்பவர் விரும்பி ஏற்கும் மரக்கலம் ஆகும் எனத் திருக்குறள் செப்புகிறது.

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடு நீரார் காமக் கலன்" ***- திருக்குறள் 605***

வார்த்தைகளை வாயால் வெளியில் விடும்போது மிக அவதானமாக இருத்தல் வேண்டும். மற்றவர்களின் மனம் புண்படும் படியாக வார்த்தைகளைப் பேசக்கூடாது. 'யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே' என்பது தவயோகி திருமூலநாயனாரின் கட்டளை.

சிலர் எதுவித சிந்தனையுமில்லாமல் வார்த்தைகளைக் கொட்டிவிடுவார்கள். மூளைக்கும், அவர்களுடைய வாயால் வரும் சொற்களுக்குமிடையே எதுவித தொடர்பும் இருப்பதில்லை. இவ்வாறு பொருளில்லாமல், எதுவித பயனுமில்லாமற் பேசுவதைப் பிதற்றல், உளறல் எனப் பலவாறு கூறுவார்கள். பயனுடைய சொற்களைப் சொல்ல முடிந்தாற் சொல்லுங்கள். இன்றேல் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருங்கள். வீண் வார்த்தைகள் எதுவும் பேச வேண்டாம் எனத் தெய்வத்தமிழாகிய திருக்குறள் நமக்குக் கட்டளையிடுகிறது.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்" ***- திருக்குறள் 200***

எந்தச் செய்கையிலும் வாழ்வியல் நிதானம் வேண்டும். தப்புத்தாளம் போட்டால் வாழ்வில் எல்லாமே சீரழிந்துவிடும். சமநிலை தவறாத மனநிலையோடு காரியங்களை ஆற்றும் பொழுது எல்லாக் காரியங்களும் சித்தி பெறும். சிறப்பாக இருக்கும். பாடுபட்டு உழைக்கும் பணத்தைப் பயன் அறிந்து

செலவு செய்தல் வேண்டும். 'ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு' என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. உழைக்கும் காலத்தில் ஊதாரித்தனமாகச் செலவு செய்தால் வாழ்வின் இறுதிக் காலத்தில் யாசகம் செய்து வாழ வேண்டிய நிலை ஏற்படும். பணத்தைச் சரியாகத் தேவை அறிந்து செலவிடுதல் போல நேரத்தையும் பயனுள்ளதாகப் பயன்படுத்துதல் வேண்டும். 'காலம் நம் கையிற் கட்டுண்டு கிடவாது' என்பது முதுமொழி. ஓடிக்கொண்டு இருக்கும் காலத்தைச் சரியாகப் பயன்படுத்துபவன் வாழ்விற் பல வெற்றிகளைக் குவிப்பான். 'பதறாத காரியம் சிதையாது' என்பதற்கேற்ப, உணர்ச்சிவசப்படாமல் மன ஒருமைப்பட்டுடன் தமக்குரிய கடமைகளைச் செய்பவனே கர்மயோகி ஆவான். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற நினைப்புடன் செயற்படுகின்றவன் மனிதருள் மாணிக்கமாக உயர்ந்து விடுவான்.

உலகியல் வாழ்க்கையிலே, படிப்பறிவிலும் பார்க்கப் பட்டறிவே வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகிறது. நல்வாழ்வு, வாழ்ந்த அனுபவஸ்தர்களின் வார்த்தைகளை ஆப்த வாக்கியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். 'அளவுக்கு மிஞ்சி உண்ணாதே, அளவுக்கு மிஞ்சி உறங்காதே, அறிவுக்கு மிஞ்சி உளறாதே' என்ற வாக்கினை அனைவரும் நினைவில் வைத்து, மானிடப் பிறவியை மகத்தான பிறவியாக மாற்றி, மனிதரில் தெய்வமாக உயர்வோமாக.

தீய ஒலி அலைகள் எந்த நேரமும் சூழ்ந்திருக்கின்ற உலகத்திலும் உள்ளத்திலும் இறைவனின் நாம ஒலி அலைகளை நிறையச் செய்ய வேண்டும். அதனால் மனித உள்ளத்தில் நல்ல நினைவுகளை உண்டாக்கலாம். நல்ல நினைவுகளினால் நல்ல பேச்சும், நல்ல செயலும் உண்டாகும். இந்தக் கலியுகத்தில் ஜபப் பயிற்சி ஒன்றே நித்திய சாந்தியை அளிக்க வல்லது.

– ஆத்மஜோதி நா. முத்தையா

பக்தி மார்க்கமே பரமனடி காட்டும்

ஆன்மா இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு இந்து சமயத் திருநூல்கள் பல்வேறு வழிகளைக் கூறியுள்ளன. கலியுகத்தில் இறைவனைப் பற்றிப்பிடிப்பதற்கு உகந்தது பக்தி மார்க்கம் ஒன்றே என்று நாரதமகரிஷி தனது பக்திச்சூத்திரத்திற் குறிப்பிட்டுள்ளார். அடியவர்கள் இறைவனைப் பற்றுவதற்கு பக்தியாகிய வலையை வீசவேண்டும் என்கிறார் மணிவாசகர். அடியவர்கள் வீசுகின்ற பக்தி வலையில் இருந்து அப்பனாகிய இறைவன் தப்ப முடியாது என்று திருவாசகம் குறிப்பிடுகிறது.

அன்பின் முதிர்வு நிலைதான் பக்தி. காய்முற்றிக் கனியாக மாறுவது போல, அன்பு முற்றி பக்தியாகப் பரிமளிக்கிறது. 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்று தமிழ் மறையாகிய திருக்குறள் செப்புகிறது. தூய அன்பினால் யாரையும் நம் வசப்படுத்தலாம் என்பது உலகியல் அனுபவம். அதிகார பலத்தாலோ அல்லது ஆயுத பலத்தாலோ யாரையும் அடக்க முடியாது. இவ்வாறான அடக்கு முறைகள் நீண்ட காலம் நிலைப்பதில்லை. அன்பினாற் கட்டுண்டு இருப்பவர்களின் பிணைப்பை எந்த ஒரு சக்தியாலும் அசைக்க முடியாது. கண்ணப்பனின் அன்பிற்கு காளத்தியப்பன் கட்டுண்ட வரலாற்றைப் பெரியபுராணம் எடுத்து விளக்குகிறது. பக்தி நெறியின் உயர்வு நிலைக்குச் சென்றுவிட்டால் அடியவன் பித்தனாகவே மாறி விடுவான்.

'பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும் ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்' என மணிவாசகப் பெருமானும் தான் அருளிய திருவெம்பாவைப் பாடலிற் பக்தன் பித்தனாக மாறும் உணர்வு நிலையைச் சித்தரித்துள்ளார். இறைபித்துப் பிடித்த பித்தனின் நா, எப்பொழுதும் இறை

நாமத்தையே உச்சரிக்கும். ஹரி, ஹரி என்று நாராயணனின் நாமத்தையே இடைவிடாது உச்சரித்தபொழுது என்னைப் பித்தன் என்று பேசுகின்றார்கள். இதற்காக என்னால் உம்மைக் கைவிட முடியுமா? என்று உரிமையுடன் மாயவனைப் பாடுவதைப் பின்வரும் திருமங்கையாழ்வாரின் பாடலிற் காணலாம்.

அத்தா அரியே என்றுன்னை அழைக்கப்
பித்தா என்று பிறர் பேசின்றார் என்னை
முத்தே மணி மாணிக்கமே முளைக்கின்ற வித்தே
உன்னை எங்ஙனம் நான் விடுகேனே.

பக்தி என்பது : தான், இறைவன் என்ற இரண்டிலும் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே ஆகும். பக்தியே உண்மைச் சமயத்தின் உயிர்நாடியாகத் திகழ்கிறது. இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று மனிதமனம் முயல்கின்ற முயற்சியே பக்தியாகும். ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பக்தி எனப்படும்.

தன்னை மறந்து தற்போதமில்லாமல் ஒரு செயலைச் செய்தால் அது உள் நின்று தூண்டும் இறையருளாற் செய்யப் பெற்றதாகவும், இந்நிலையே உண்மையான பக்தனின் நிலை என்றும் பெரியபுராணம் சித்தரிக்கின்றது. 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்' என அடியார்களின் செயல்கள் அனைத்தும் ஆண்டவனின் செயல்கள் என மணிவாசகரின் திருவாசகமும் கூறுகிறது.

அன்பு நெறியில் எது செய்தாலும் அது எம்பிரானுக்கு ஏற்றதாகும் என்பதைக் கண்ணப்பநாயனார் புராணத்தின் ஊடாகச் சேக்கிழார் விளக்குகிறார். 'பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்' எனப் பெரியபுராணம் இதனைக் குறிப்பிடுகிறது.

ஆன்மா இறைவனை அடைவதற்குப் பகவத் கீதை கூறும் வழிகளிற் பக்தியோகமும் ஒன்றாகும். நாரதர் பக்தியினை ஆழ்ந்த இறைப்பற்று என்று கூறுகிறார். அன்பே கடவுள் என்ற உண்மைக்கு ஏற்ப வாழ்க்கை நடாத்துதலே பக்தியோகம் என்பது யாக்ஞவல்லிய மகரிஷியின் கருத்தாகும். இறைவன் தம்மைக் கைவிடமாட்டான் என்று அடியவனிடம் ஏற்படும் அசைக்க முடியாத நம்பிக்கைதான் பக்தி. அன்பின் மேலீட்டினாற்றோன்றும் உரிமைப் பாட்டினை உண்மையான பக்தனின் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் வெளிப்படுத்திவிடும்.

உண்மையான பக்தன் இறைவனிடம் எதையும் கேட்டுப்பெற வேண்டியதில்லை. தன்னைப் பூரண சரணாகதியாகப் பிரபக்தி நிலையில் நின்று வணங்கும் அடியவனுக்கு எதைக் கொடுத்தல் வேண்டும், அவனை எவ்வாறு வழி நடாத்துதல் வேண்டும் என்பதையெல்லாம் இறைவனே பார்த்துக்கொள்வார்.

"வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில்

அதுவும் உன்தன் விருப்பன்றே"

என்று தெய்வ வாசகமாகிய திருவாசகமும் இதனைக் கூறுகிறது.

அதிக கர்வம், அதிகப் பேச்சு, தியாக மனப்பான்மை இன்மை, கோபம், சுயநலம், நட்புக்குத் துரோகம் செய்தல் இவை ஆயுளை அழிக்கக் கூடிய அறு கூரிய வாள்கள் என மகாபாரதத்தில் விதுரர் திருதராஷ்டிரனுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

– மகாபாரதம்

மானிடப் பிறவியின் மாண்பு

இந்த மண்ணிலே பிறந்த எல்லா மனிதருக்கும் மரணம் உண்டு. மருத்துவ வசதிகளின் உதவியினால் மரணத்தைப் பின் போடலாம். ஆனால் முற்றாகத் தடுத்து நிறுத்த முடியாது. பிறப்பவர் யாவரும் இறப்பது உறுதி என்பது ஆப்த வாக்கியம். 'பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே' என்பது அப்பர் பெருமானின் வாக்கு. 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்' எனப் பிறவி நோயினால் ஏற்பட்ட களைப்பை மணிவாசகரும் கூறுகின்றார். 'செத்த பிணத்திற்காகச் சாகப் போகும் பிணங்கள் அழுகின்றன' என்று மரண வீட்டில் அழுபவர்களைப் பார்த்துப் பட்டினத்தடிகள் கூறியுள்ளார். ஒரு புல்லின் நுனியில் இருக்கும் புழுவானது அந்தப் புல்லில் இருந்து மறு புல்லிற்குத் தாவுவது போல ஆன்மாக்கள் பழைய உடல்களைக் களைந்து விட்டுப் புதிய உடல்களை எடுக்கின்றன என்று பிருகதாரண்ய உபநிடதம் கூறுகின்றது.

மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் மரண வீட்டிற்குச் செல்லும் நாம் கவலை அடைகின்றோம். கண்ணீர் விடுகின்றோம். மரணம் என்னும் நிகழ்ச்சியில் தோன்றும் அனுபவமே மிகப் பெரிய துன்பம் ஆகும். நைந்து போன பழைய ஆடையை எறிந்து விட்டு நாம் புதிய ஆடைய அணிவது போல, பழுதுற்ற உடலை உதறி விட்டு உயிர் புதிய உடலைப் பெறுகின்றது என்றே பகவத்கீதையும் கூறுகின்றது. எடுத்த பிறப்பைச் சரியாகப் பயன்படுத்தாதவர்களுக்கு மீண்டும் பிறவி கிடைக்கின்றது. என்பதைப்

"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்"

எனத் திருமந்திரமும் செப்புகிறது.

உயிர் தங்கி நிற்கும் சிறைச்சாலையாகவே உடல் திகழ்கிறது. மாயா யந்திரமாகிய உடலுக்குள்ளே ஆன்மா

மறைந்து நிற்கிறது என்பதை 'மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா' எனச் சிவஞானபோதமும் குறிப்பிடுகின்றது.

பிறவிகளில் மகத்தான பிறவியாகிய மானிடப் பிறவியை எடுத்தவர்களிற் பலர் பிறவியின் பயனை உணராமல் வாழ்ந்து மடிகின்றார்கள். ஆனால் இறையருளுக்குப் பாத்திரமாகிய இந்த மண்ணிலே தோன்றும் சிலர் தமது வாழ்வைப் பயனுள்ளதாக்கி மகத்தான சாதனைகளைச் செய்துள்ளார்கள். இவர்கள் வாழ்ந்த காலம் குறுகியதாக இருந்தாலும் சாதித்த சாதனைகள் நிகரற்றவையாக உள்ளன. சங்கரர் முப்பத்திரெண்டு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். சனாதன தர்மமாகிய இந்து சமயத்தின் சிறப்பைப் பாரததேசம் முழுவதும் கால்நடையாகச் சென்று பரப்பினார். பௌத்த சமயத்தின் பிடியில் இருந்து இந்து சமயத்தைப் பாரதநாட்டில் அழியவிடாமற் பாதுகாத்த பெருமை சங்கராச்சாரியாருக்கே உண்டு. உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை என்பவற்றை ஆராய்ந்து அவற்றிற்கு விளக்கஉரை எழுதினார். ஞான யோகத்தில் நின்று இறையருளைப் பெற விரும்புகின்றவர்களுக்கு இவருடைய இந்த உரை நூல்கள் துணை செய்கின்றன. சாதாரண மக்கள் இறையருளைப் பெறுவதற்குத் துணை செய்யக்கூடியது பக்தி மார்க்கம் என்பதை உணர்ந்த சங்கரர் சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரி, பஜகோவிந்தம், கணேச பஞ்சரத்தினம், சுப்பிரமணிய புஜங்கம், கனகதாரா முதலிய பக்திரசம் ததும்பும் தோத்திர நூல்களைப் பாடியருளினார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் தொன்மை வாய்ந்த இந்து சமயத்திற்குப் புது இரத்தம் பாய்ச்சினார். 'ஜீவ சேவையே சிவபூஜை' என்ற தனது குருநாதனின் தாரக மந்திரத்தைச் செயல் வடிவம் ஆக்கினார். முப்பத்தொன்பது வருட குறுகிய கால வாழ்க்கைக் காலத்தில் உலகமே வியக்கும் சாதனைகள் பலவற்றைப் புரிந்தார். பரதேசிகளின் சமயம் இந்து சமயம் என்ற மேற்கு நாட்டவர்களின் பார்வையை மாற்றி மனிதனைப்

புனிதனாக்கும் சமயம் இந்து சமயம் என்பதை நிறுவிக் காட்டினார். இவரால் உருவாக்கப்பட்ட இராமகிருஷ்ண மிஷன் இன்று உலகின் பல பாகங்களிலும் கிளைகளை அமைத்து சமயப்பணி, சமுதாயப்பணி, கல்விப்பணி எனப் பல்வேறு பணிகளையும் புரியும் தொண்டு நிறுவனமாகத் திகழ்கின்றது.

வறுமையின் கோரப்பிடியிற் சிக்கித் தவித்த மகாகவி பாரதியார் முப்பத்தொன்பது வருடங்களே இவ்வுலகில் வாழ்ந்தார். ஆன்மிகக் கவிஞனாக, தேச விடுதலைக் கவிஞனாக, சமுதாய சீர்திருத்தக் கவிஞனாக - பல்வேறு நிலைகளில் கவிதைகளைப் பாடித் தமிழர் சமுதாயத்திற்கு உந்து சத்தியாகத் திகழ்ந்தார். சிறந்த சக்தி உபாசகராகிய பாரதியின் தெய்வீகப் பாடல்களில் ஆன்மீக சிந்தனைத் தெளிவு ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. 'சொல்லடி சிவசக்தி' என்று அம்பிகையை உரிமையோடு அழைத்து தனது சுடர் விட்டுப் பிரகாசிக்கும் அறிவைச் சரியாகப் பயன்படுத்தக் கூடிய வல்லமையையும் தர வேண்டும் என்று வேண்டி நிற்கின்றார். பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண் புழுக்கம், அச்சம் ஆகிய எட்டும் மனிதனின் மனதைப் பாழ்படுத்தும் அகப் பேய்கள் என்கிறார். அப்பேய்களை அடியோடு களைவதற்கு ஞானம் என்கிற வாளைத் தூக்க வேண்டும் என்கிறார்.

சங்கரர், விவேகானந்தர், பாரதியார் ஆகிய மூவரும் இப்பூமியிலே வாழ்ந்தகாலம் மிகவும் குறுகியது. ஆனால் நூறாண்டு காலம் வாழ்ந்து மறைந்தவர்கள் சாதிக்காத சாதனைகள் பலவற்றை மூவரும் செய்துள்ளார்கள். வாழும் காலம் முக்கியமல்ல. வாழும் முறைதான் முக்கியம் என்பதை மூவரும் உணர்த்தியுள்ளனர்.

இலட்சக்கணக்கான உயிர்கள் நாள்தோறும் மடிகின்றன. பிறப்பும் இறப்பும் சக்கரம் சுழல்வது போல நாள் தோறும் இடம் பெறுகின்றன. மகத்தான பிறவியாகிய மானிடப் பிறவியை

எடுத்தவர்களில் பலர் பகுத்தறிவில்லாத மிருகங்களிலும் மோசமான வாழ்க்கையை இம்மண்ணிலே வாழ்கிறார்கள். தன்னுடைய வீட்டில், தான் வாழும் சூழலில் வாழ்பவர்களைத் துன்பப்படுத்துவதிலே இன்பம் காண்கிறார்கள். 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்றார் தவயோகி திருமூலர். ஆனால் தன்னையும் துன்ப வலையிற் சிக்க வைத்துவிட்டுத் தான் வாழும் சூழலையும் துன்ப மயப்படுத்தி தரித்திரத்தையும், துக்கத்தையும் அரவணைத்து வாழப் பலர் முற்படுகின்றனர். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்றார் நாவுக்கரசர். ஆனால் துன்பமே எந்நாளும் இன்பமில்லை என வாழ்க்கையையே நரகமாக்கி வாழச் சிலர் முனைகிறார்கள். நாலு தலைமுறைக்குத் தேவையான பணத்தைத் தேடி வைத்திருக்கிற பலர் வயிறார உண்ணவும் முடியாது. நிம்மதியாக உறங்கவும் முடியாது தவிக்கிறார்கள்.

இறையருள் நமக்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையோடு செயற்படுபவர்களின் காரியங்கள் யாவும் சித்தியாகும். ஈனர்களின் செயல்கள் எதுவும் இவர்களைத் தாக்காது. தர்மத்தை முன்வைத்து அறவாழ்வு வாழ்பவனைத் தர்மம் என்றும் காப்பாற்றும். எடுத்த பிறப்பினைச் சீராகப் பயன்படுத்தி ஒழுங்காக வாழ்ந்த மனிதன் தெய்வ நிலைக்கு உயர்ந்து விடுவான் என்பதை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" ***- திருக்குறள் 50***

என்ற செந்நாப் போதாருடைய திருக்குறளும் செப்புகிறது.

தமிழ் வேதங்கள் யாவும் கடவுளைக் கண்டவர்கள் அருளியவை. உடலோடு முத்தி பெற்ற புண்ணியவான்கள் மூலம் இறைவரே அருளியவை. இங்கு சடங்குகட்கு இடமே இல்லை. உண்மை, நேர்மை, அன்பு, ஈகை ஆகிய நற்பண்புகளைக் கொண்டதுதான் இறைவழிபாடு எனப் பறைசாற்றுபவை நமது தமிழ் வேதங்கள்.

- பன்னிரு திருமுறை ஆய்வுக் கட்டுரைகள்.

அருளியலும் அறிவியலும்

அறிவின் உத்திகளால் நகர்த்தப்படுவது அறிவியல். உணர்வினை ஆதாரமாகக் கொண்டது அருளியல். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் வாழ்ந்த இரு சகோதரர்கள் இரட்டைப் புலவர்கள் என அழைக்கப்பட்டார்கள். ஒருவர் கால் நடக்க முடியாத நொண்டி மற்றயவர் கண்பார்வை இல்லாத குருடர். குருட்டுப்புலவர் நொண்டிப் புலவரைத் தன் தோள்மேல் தூக்கிக்கொள்வார். நொண்டிப் புலவர் போக வேண்டிய பாதையினைக் காட்டுவார். இவர்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்து வாழ்ந்து வந்தார்கள். சமயம் இல்லாத விஞ்ஞானம் நொண்டி, விஞ்ஞானம் இல்லாத சமயம் குருடு என்றார் மாபெரும் விஞ்ஞானியாகிய அல்பேர்ட் ஜன்ஸ்ரின் 'விஞ்ஞானம் மூட நம்பிக்கையின் எதிரியே ஒழியச் சமயத்தின் எதிரியன்று' என்பது மூதறிஞர் ராஜாஜியின் கூற்றும் ஆகும்.

நாம் சிலவற்றை உணர்ந்து கொள்கின்றோம். சிலவற்றை அறிந்து கொள்கின்றோம். அறிவு உணர்வு இரண்டும் மனிதனின் தனித்தனியான பண்புகள். மலரின் மணத்தைக் கண்ணாலோ காதாலோ நுகர முடியாது. மூக்கால் தான் முகர வேண்டும். சித்திரத்தின் அழகினை கண்ணால் தான் கண்டு களிக்க முடியும். ஐம்புலன்களின் சக்திக்கு ஓர் எல்லைக் கோடு இருப்பது போல அறிவின் ஆற்றலுக்கும் எல்லைக்கோடு உண்டு.

நமது அறிவினாலோ புலன்களினாலோ இறைவனைக் காண நினைப்பது ஒருவன் தன் தோளிலே தான் ஏறி நிற்பதையும் வண்டிச் சக்கரத்தை உருட்டிப் பார்ப்பதையும் ஒக்கும் என உபநிடதங்கள் கூறுகின்றன. அறிவில் மட்டுமே நம்பிக்கை கொண்டவர்கள் அறிவின் ஆற்றலால் எதையும் சாதிக்க முடியும். வெற்றிகொள்ள முடியும் என எண்ணுகின்றனர். அறிவால் அறிய முடியாதது உண்டு என்பதை உணர்வது தான் உண்மையான அறிவாகும்.

அறிவு அறிவு என்று அரற்றிக் கொண்டு இருக்க வேண்டாம். அறிவின் அறியாமையை நாம் அறிவதில்லை. அறிவின் அறியாமையைக் கடந்து உண்மையறிவை நாம் பெற்று விட்டால் அறிவால் அறிய முடியாத இறைமை என்ற அழகினை நாம் காண முடியும் என்பதைத் தவயோகி திருமூலநாயனார் தனது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

அறிவு அறிவு என்று அரற்றும் உலகம்
அறிவறியாமை யாரும் அறியார்
அறிவறியாமை கடந்து அறிவானால்
அறிவறியாமை அழகியவாறே ***-திருமந்திரம் 2362***

அறிவியல் கண்டுள்ள முடிவுகள், தீர்ப்புக்கள், சாதனங்கள் என்பவற்றைப் பற்றி அறியும் படி மெய்ப்பித்துக் காட்ட முடியும். ஆனால் உள்ளத்து உணர்வாக உள்ள இறைமையினை மெய்ப்பித்துக் காட்டமுடியாது. அது ஆய்வுகளுக்கும் சோதனை களுக்கும் அப்பாற்பட்டது. முகத்துக்கண்ணால் பார்த்து முடிவுக்கு வர முடியாது. அக்கண்ணால் பார்த்துத்தான் முடிவுக்கு வரலாம். எல்லாவற்றையும் அறிவால் அறியமுடியாது அனுபவத்தால் தான் உணரமுடியும். அனுபூதி நிலையாகிய தெய்வீக நிலை ஏற்பட்டால் இறைவனை அகத்திலே காண முடியும். என்றே திருமந்திரம் கூறுகின்றது.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்
மகட்குத் தாய் தன் மணாள னோடாடிய
சுகத்தைச் சொல் என்றாற் சொல்லுமா றெங்ஙனே.

-திருமந்திரம் 2944

அப்பிள் மரத்தடியில் உட்கார்ந்திருந்த நியூட்டன் மரத்திலிருந்து மண்மீது விழுந்த அப்பிள்பழம் பூமிக்குள் இருந்த ஈர்ப்புச் சக்தியின் விளைவால் தான் விழுந்தது என்ற உண்மையைத் தனது அறிவால் அறிந்து கொண்டான். ஆனால் இந்த ஈர்ப்புச்சக்தி பூமிக்கு எவ்வாறு வந்தது என்பதை ஐசாக்நியூட்டனோ, அவன் வழிவந்த விஞ்ஞானிகளோ இன்று வரை கூறவில்லை.

ஆதவனுக்கு ஒளி எப்படி வந்தது? நிலவில் குளிர்ச்சி எவ்வாறு வந்தது? தீயிலே வெப்பம் எவ்வாறு கலந்துள்ளது என்று விஞ்ஞானம் விளக்க முடியாத வினாக்களுக்கு எல்லாம் மெய்ஞ்ஞானம பதில் தந்துள்ளது. இவற்றிற்கு இறைவன் தான் முழுமுதற் காரணம் என்பதை மணிவாசகரின் தெய்வ வாசகமாகிய திருவாசகத்தின் திருவண்டப்பகுதி தெளிவாக விளங்குகின்றது.

"அருக்கனிற் சோதி அமைந்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன் வாய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல் திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணின் திண்மை வைத்தோன் என்றென்
றெனைப் பலகோடி யெனைப் பல பிறவும்
அனைத்தனைத் தவ்வையின் அடைந்தோன்"

ஒன்று நம் அறிவுக்கு அப்பாற்பட்டது என்பதைக் கண்டு அது தான் இறைமையின் இயக்கம் என்று உணர்த்தும் முறை அருளியலைச் சார்ந்தது. அறிவியலின் ஆற்றல் தடைப்பட்ட நிலையில் அருளியல் தொடங்குகின்றது. அறிவுகொண்டு காண இயலாததை உணர்வுகொண்டு அது காண்கின்றது.

அறிவியலோடு அருளியல் இணைந்து செயற்படுமானால் இறைமையின் இனிமையினை சுகத்தினை நம்மால் உணர முடியும். மேலை நாட்டில் அரசோச்சிய விஞ்ஞான நாகரிகத்தை மெய்ஞ்ஞான வழிக்குக் கொண்டு வந்தவர் வீரத்துறவி விவேகானந்தர். இரத்த வெறியுடன் யுத்த சந்நதம் கொண்டு ஆடிய அசோகனை ஆன்மீக நாட்டமுள்ளவனாக மாற்றிய பெருமை புத்த பகவானையே சாரும்.

அறிவியலின் வளர்சியினால் பல பௌதிக வசதிகளை மனிதன் பெற்றிருக்கின்றான். மனித வாழ்வின் தேவைகள் பல நிறைவேறியுள்ளன. பல மைல்களுக்கு அப்பால் இருக்கும் உறவுகளோடு முகம் பார்த்துக் கதைக்கக் கூடிய அளவிற்கு தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்பட்டுள்ளன. மனிதனின் உடலில்

ஏற்படும் நோய்களில் பலவற்றுக்கு தீர்வு காணக் கூடிய வகையில் மருந்துவம் அபரிதமான வளர்ச்சியினைப் பெற்றுள்ளது. ஒரு சில மணித்தியாலயங்களில் பல மைல்களைக் கடந்து செல்வதற்கான பிரயாண வசதிகள் ஏற்பட்டுள்ளன. உடம்பால் செய்யும் வேலைகள் பலவற்றை இயந்திரங்களே செய்கின்றன. வாழ்க்கை வசதிகள் பெருகிவிட்ட நிலையில் வாழும் மனிதனின் அகத்தில் என்றும் புயலும் சூறாவளியுமே வீசுகிறது. மனம் கொதித்துப் போய் கொந்தளிப்பு நிலையிலேயே என்றும் உள்ளது. நிறையச் செல்வம் வளம் உள்ள மனிதன் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாமல் தவிக்கிறான். தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாடித் திரிவதற்கே அஞ்சுகிறான். ஏன் நமக்கு இந்த அவலநிலை? என்று நாம் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் பெரும்பாலான மனிதர்களிடம் இறையுணர்வு நீங்கப் பெற்று இரையுணர்வே தலை விரித்தாடுகிறது. 'உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே' என்ற நிலையில் பலர் வாழ ஆரம்பித்து விட்டார்கள். மனிதனின் மனம் குப்பைத் தொட்டியாக மாறி வருகிறது. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய நான்கையும் நீக்கி வாழ்வதே அறவாழ்வு என்கிறார் வள்ளுவர்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்" *-திருக்குறள் 35*

என்பது வள்ளுவர் வாக்கு. பொய், கயமை, சினம், சோம்பர், கவலை, மயக்கம். வீண்புழுக்கம், அச்சம் என்னும் அகப்பேய்களை எல்லாம் ஞானம் என்கிற வாளால் வெட்டி வீழ்த்த வேண்டும் என்று வீரா வேசம் கொண்டு முழங்கின்றார் பாரதியார்.

மனித மனம் தூய்மையாக இருந்தால் தான் அறிவியல் வளர்ச்சியின் பெறுபேறுகளை அவனால் பூரணமாக அனுபவிக்க முடியும். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த நிலையில் அகத்திலே அருள் பிரகாசிக்கும் படியாக இருந்தால் அவனால் கண்டறியப்படும் அறிவியல் உண்மைகளும் சமூகப் பயன்பாடு உடையவையாக அமையும். அருளியலும் அறிவியலும் சேர்ந்து பிரகாசிப்பவர்களே நாட்டின் தலைவர்களாக உருவாக வேண்டும். அதிகாரிகளாக உயர வேண்டும். ஆன்மீகத் தலைவர்களாக மிளிர வேண்டும். சமுதாய சிற்பிகளாகத் திகழ வேண்டும். என்ற புனிதமான வேண்டுதல் நிறைவேற நாம் அனைவரும் இறையருளைப் பிரார்த்திப்போமாக.

திருவிழாவும் அன்னதானமும்

எமது பிரதேசங்களில் திருவிழாக்கள் களைகட்டியுள்ளது. திருவிழாக்கள் தொடங்கிவிட்டால் கோவிலுடன் தொடர்புடைய இடங்களில் தெய்வீக மணத்திற்குக் குறைவிருக்காது. கண்ணிற்கும், கருத்திற்கும் இனிமை தருகின்ற காரணத்தால் பண்டைக்காலம் முதல் திருவிழாக்கள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒவ்வொரு ஊரிலும் முருகனுக்கு அன்புடன் விழா எடுக்கப்பட்ட செய்தி திருமுருகாற்றுப்படையில் உள்ளது. பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தன் முருகன். இவனை வசப்படுத்த விழா எடுக்கிறார்கள். தங்கள் தங்கள் அறிவுக்கு எட்டிய வரையில் விழாக்களை மேற்கொள்கிறார்கள்.

சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து வைத்து அந்த நிலத்து வழக்கப்படி ஆட்டை அறுத்து பூசை வைக்கிறார்கள். விழாவை ஆரம்பிக்கும் வகையில் கோழிக்கொடியை நட்டு விழாவுக்குரிய அமைப்பை ஏற்படுத்துகின்றார்கள். இப்படி ஒவ்வொரு ஊரிலும் விழாவுக்குரிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டு விழா நடைபெறுகின்றது.

"சிறுதினை மலரொடு விரைஇ, மறி அறுத்து
வாரணக் கொடியொடு வயிற்படநிறீஇ
ஊர் ஊர்கொண்ட சீர்கெழு விழவினும்"

என இச்செய்தியை நக்கீரர் குறிப்பிடுகின்றார்.

காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரவிழா எடுத்த செய்தி சிலப்பதிகாரத்தில் வருகின்றது. அங்கும் விழாவிற்கு

அறிகுறியாகக் கொடியேற்றப்படுகின்றது. இந்திரன் கோவிலில் (தருநிலைக் கோட்டத்தில்) அட்டமங்கலத்தோடு ஐராவதம் தீட்டப்பட்ட நெடுங்கொடியை வானில் ஏற்றினார் என செய்தி காணப்படுகின்றது.

"தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற எடுத்து"

விழாக்களில் முக்கிய அம்சமாக மக்களுக்கு அறிவூட்டும் செயற்பாடு இடம்பெற வேண்டும். இங்கு தான் மக்கள் மொழியில் இறை பெருமை எடுத்துரைக்கப்படுவது அவசியமாகின்றது. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் இந்திரவிழாவில் சொற்பொழிவு இடம்பெற்றதாக வரும் செய்தி நமக்கு நல்லதோர் முன்னுதாரணமாக உள்ளது.

"அறவோர் பள்ளியும் அறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
திறலோர் உரைக்கும் செயல் சிறந்தொருபால்"

என இச்செய்தி சிலப்பதிகாரத்திற் பேசப்படுகின்றது. அதாவது அறவோர் பள்ளிகளிலும் அறத்தைப் போற்றும் அறச்சாலைகளிலும் மதில் புறத்தே உள்ள புண்ணிய இடங்களிலும் அறத்தின் சிறப்பினை உணர்ந்தோர் அறம் போதிக்கும் செயலை மேற்கொண்டனர். எனவே திருவிழாக்களின் போது நல்லுபதேங்கள் இடம்பெறுவது சாலப்பொருத்தமானதாக அமையும்.

எமது கண்கள் பெற்ற பயன் திருவிழாக்களைக் கண்டுகளித்தலே என்பார் திருஞானசம்பந்தர். எனவே கண் களிக்கும்படி நல்விழாக்களை ஆலயங்களில் அமைக்க வேண்டும்.

ஆலயங்களைக் கேளிக்கைத் தானம் ஆக்காது பக்தி மணக்கும் புனித இடமாகப் பேணுவதில் அனைவரும் ஆர்வம் காட்ட வேண்டும்.

ஆலயங்களைக் கேளிக்கைத் தானம் ஆக்குதல் குளிக்கப் போய்ச் சேறு பூசுவதற்கு ஒப்பானது. கேளிக்கை, களியாட்டம் முதலியவற்றை அனுபவிக்க வேண்டுமெனின் அதற்கெனப் பிரத்தியேகமாக ஒரு மைதானத்தை ஒதுக்கி இவற்றை மேற்கொள்வது அறிவுடைமையாக அமையும். அதனை விடுத்து ஆலய அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் முகமாகவும், பக்தியைக் கொச்சைப்படுத்தும் விதமாகவும் விழாக்களை அமைப்பதுதான் வேதனைக்குரியதாக உள்ளது.

திருவிழாக்களை அர்த்தமுள்ளதாக அமைத்துக்கொள்ள இக்காலங்களில் அன்னதானம் வழங்குவதும் சாலச் சிறந்ததாகும். எதைக் கொடுத்தாலும் திருப்தியடையாத ஒருவனுக்கு உண்டி கொடுப்பதன் மூலம் 'போதும்' எனக் கூற வைக்கலாம். உலகிலே பிறந்தார் பெறும் பயன் சிவபெருமானுடைய அடியவர்களுக்கு அன்னமளித்தலும், இறைவனுடைய நல்விழாவைக் கண்டு களிப்புறலுமே என ஞானசம்பந்தர் குறிப்பிடும் செய்தியைப் பெரியபுராணம் அழகாகச் சித்தரிக்கிறது.

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிகூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மையா மெனில் உலகர்முன் வருகென உரைப்பார்"

என என்பைப் பெண்ணுருவாக மாற்றும் அற்புதத்தைச் சம்பந்தர் மேற்கொண்ட போது திருவிழாப் பற்றியும், அன்னதானம் கொடுப்பது பற்றியும் மேற்கண்டவாறு இணைத்துப் பாடியதைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

அன்னதானம் வழங்கலின் முக்கியத்துவத்தை உரைக்கும் வகையில் சேக்கிழாரின் பெரியபுராணம் சுமார் 30 அடியவர்களுடைய கதைகளுடன் அன்னதானம் வழங்குவதைத் தொடர்புபடுத்துகின்றது. அன்னமிடலே தமது உயர் இலட்சியம் என வாழ்ந்த பெருமக்களைப் பெரிய புராணத்தில் தரிசிக்கின்றோம்.

தற்போது திருவிழாக் காலங்களில் அன்னதானம் வழங்கப்பட வேண்டும் என்ற உணர்வு பல ஆலயங்களைச் சார்ந்த அடியவர்களிடம் காணப்படுகின்றது. ஆயினும் இந்த அன்னதானங்களில் வலியோர் உடன் பயன் பெறுவதும் மெலியோர் இடமின்றி ஒதுக்கப்படுவதுமான நடைமுறைகளைக் காண்கின்றோம்.

அன்னதானத்தில் இரத்தப்பிடிப்புள்ள இளைஞர்கள் முண்டியடித்து முதற்பந்தியில் இருந்துவிடுவது சமூக யதார்த்தம். அதேவேளை குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் முன்னுரிமை வழங்கும் பழக்கம் நம்மத்தியில் காணப்படாமை மிகப்பெரும் குறைபாடாகும்.

இதைவிட அன்னதானத்திற்கெனப் பயன்படுத்தப்படும் இடம், பொருள்கள் என்பன குறித்த சுகாதாரத்திலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பன்னிரு திருமுறைகளும் (தமிழ் வேதங்கள்) இறைவரின் வடிவமே ஆகும் என்பதை மனதில் தெளிவாகக் கொள்ள வேண்டும். பன்னிரு திருமுறைகள் இல்லாத வீடே சைவத் தமிழர்களிடம் இருக்கக் கூடாது. திருமுறைகள் உள்ள வீட்டில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

"புண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர்
புண்ணியர் சிவகதி புகுதல் திண்ணமே"

- சம்பந்தர் பாடல்

தானங்களில் உயர்ந்தது...

இந்தப் பூமியிலே வாழும் மனிதர்கள் தமது வாழ்நாளில் செய்யக்கூடிய தானங்கள் பல உண்டு. பசுவைத் தானமாகக் கொடுப்பது கோ தானம், உடு புடைவைகளைத் தானமாகக் கொடுப்பது வஸ்திர தானம். உணவைக் கொடுப்பது அன்னதானம், தனது உழைப்பைக் கொடுப்பது சிரமதானம், நிலத்தைத் தானமாகக் கொடுப்பது பூ தானம், உயிர் காக்க இரத்தம் கொடுப்பது இரத்த தானம், தான் பெற்ற பெண்பிள்ளையை வளர்த்துத் தகுதியான மணமகனிடம் ஒப்படைப்பது கன்னிகா தானம் எனப் பல்வேறு தானங்கள் உண்டு.

தானங்களில் அன்னதானமும் வஸ்திர தானமும், தண்ணீர் தானமும் மிகச் சிறந்தவை எனக் கூறப்படுகின்றன. அன்னதானம் ஒருவருடைய பசியைப் போக்கும், வஸ்திர தானம் ஒருவருடைய மானம் காக்கும், தண்ணீர் தானம் ஒருவருடைய தாகத்தைத் தீர்க்கும். ஆலயங்களில் விழாக் காலங்களில் தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு அடியார்களின் தண்ணீர்த்தாகம் நீங்குவதற்கு வழிசெய்யப்படுகிறது. இதேபோல அன்னதானம் வழங்கும் நிகழ்வும் ஆலயங்களிலே சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

தானத்தைப் பெறுபவர்கள் திருப்தி கொள்ளும் வரை வழங்கக்கூடிய தானமாக அன்னதானம் மட்டுமே காணப்படுகிறது. தானத்தைப் பெறுபவர்கள் எல்லோரும் தானத்தைக் கொடுப்பவரை வாயார வாழ்த்துவதில்லை. ஆனால் அன்னதானம் ஒருவருடைய பசிப் பிணியைப் போக்குவதால் அவனுடைய வாய் வாழ்த்தா விட்டாலும் பசி அடங்கியதும் வயிறு வாழ்த்தும். ஒருவருக்கு பணமாகக் கொடுப்பதை விட உணவு அளிப்பது சிறந்தது. பணமாகக் கொடுத்தால் அதை அவன் வீண் செலவு செய்யவும் கூடும். உணவாகக் கொடுத்தால் அதைச் சாப்பிடத்தான் பயன்படுத்துவான். அதனால் அன்னதானம் தானங்களில் சிறந்ததாகப் போற்றப்படுகிறது.

மகாபாரதத்தில் குருவம்சத்தின் பிதா மகராகிய பீஷ்மாச்சாரியார் தருமனுக்குத் தருமோபதேசம் செய்கிறார்.

"அன்னஸ்யதானம் மதுராசவாணி யமஸ்யதே
நிர்வசனா பவந்தி"

அன்னதானம், இனிமையாகப் பேசுதல் ஆகிய இரண்டில் எதைச் செய்தவராகிலும், அவர்கள் எத்தகைய பாவங்களைச் செய்திருந்தாலும் அவர்களை யமதூதுவர்கள் துன்பப் படுத்துவதில்லை என்பது இதன் பொருளாகும். அன்னதானம் செய்தவனை யமயோகத்திற்கு அழைத்து வரக்கூடாது என்று யமதர்மராஜன் சட்டமே போட்டுள்ளார். பூமியிலே அன்னதானம் செய்தவர்களை யமதூதர்கள் தவறுதலாக யமலோகத்திற்கு அழைத்து வந்தால் அந்தத் தூதுவர்கள் யமதர்மராஜனின் தண்டனைக்கு உள்ளாவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. பசியும் ஒரு வகைப் பிணி என்றே புறநானூறு கூறுகிறது.

"பசிப்பிணி போக்கும் மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ"

புலவர்களை ஆதரிக்கும் குறுநில மன்னன் ஒருவனின் இருப்பிடத்தை புலவர் ஒருவர் விசாரிக்கும் செய்தி மேற்கூறிய பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பசி ஏற்பட்டுவிட்டால் ஒருவரிடம் இருக்கின்ற சிறப்பம்சங்கள் அனைத்தும் பறந்து ஓடிவிடும். வியாபாரத்திலே முதலாளிக்கு நல்ல வருமானம் வந்தால் தான் தொழிலாளிகளுக்கும் உரிய காலத்தில் ஊதியம் சரியாக வழங்கப்படும். மனித உடம்பிலே முதலாளியாக இருப்பது வயிறு, மற்றைய உறுப்புக்கள் யாவும் தொழிலாளர்களாகவே உள்ளன. காலம் தவறாது வயிற்றுக்கு உணவு கிடைத்தால் தான் மற்றைய உறுப்புக்கள் அனைத்தும் சரியாக இயங்கும். பெருமை, குடும்பச்சிறப்பு, கல்வி, அழகு, உயர்வு, கொடை, தானம், தவம், தொழில், முயற்சி, மங்கையரிடம் ஆசை கொள்ளல் ஆகிய அனைத்தும் பசி வந்துவிட்டால் பறந்து ஓடிவிடும் என்பதைத் தழிழ் மூதாட்டி ஔவையாரின் நல்வழிப்பாடல் பின்வருமாறு கூறுகிறது.

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை
தானம், தவம், முயற்சி, தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப்பறந்து போம்.

ஒருவருடைய ஜாதகத்திலே செவ்வாய் தோஷம் இருந்தால் திருமணம் பேசுகின்ற பொழுது பல தடைகள் ஏற்படும். பொருத்தமான செவ்வாய் தோசம் உள்ளவர்கள் கிடைக்கும் வரை திருமணம் தாமதமாகும். நாகதோஷம் இருந்தால் மக்கட்பேறு கிடைப்பதில் தாமதம் உண்டாகும். இதேபோல அன்னதோஷம் இருந்தால் பொருளாதார வசதி நிறைய இருந்தாலும் உணவு எதையும் உண்ண முடியாத நிலையில் உடலில் பல நோய்கள் குடிகொண்டு இருக்கும். அன்னதோஷம் நீங்குவதற்கு ஆலயங்களிலே அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதும், ஏழைகள், வயோதிபர்கள், அநாதைகள் ஆகியோரின் வயிற்றுப் பசியினைப் போக்க உதவுவதுமே வழியாகும் எனச் சைவசமயத் திருநூல்கள் கூறுகின்றன.

நடமாடும் கோயிலாகத் திரிபவர்கள் சிவனடியார்கள். சிவனடியார்களுக்கு அன்னம் அளிப்பது சிவனுக்கு வழங்கும் நைவேத்தியமாகவே அமையும்.

"நடமாடும் கோயில் நம்பர்க்கொன்றீயில்
படமாடும் கோயில் பகவற்கது ஆமே"

என்றே தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் கூறுகிறது.

அன்பே சிவம் என்ற கொள்கையே சைவத்தின் அடிநாதம். அனைத்துயர்களையும் அன்பினால் வசப்படுத்தி அன்பு வழி வாழ வைப்பதே சைவத்தின் குறிக்கோளாகும்.

– ஆத்மஜோதி

தெய்வங்கள் ஆகி.....

இந்தப் பூமியில் வாழும் மக்கள் அனைவரும் அமிர்தத்துவமாகிய ஆனந்தத்திற்கு உரியவர்கள். "ஆத்மஸ்ஸ புத்ரா" (அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தினது மக்களே) என்று இருக்கு வேதம் குறிப்பிடுகிறது. மனிதனுடைய உடல் படைக்கப்பட்ட பொழுது தெய்வங்கள் அவனுக்குள்ளேயே நுழைந்து விட்டன என அதர்வ வேதம் கூறுகின்றது. மனிதனுக்குள்ளே ஏற்கனவே உறைந்துள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயத்தின் பணி என்றார் சுவாமி விவேகானந்தர் "தெய்வங்களாகுங்கள்: பிறரைத் தெய்வங்கள் ஆக்குங்கள்" என்பது அவருடைய வேண்டுதலாகும்.

மானிடப் பிறவியை அரிய பிறவியென்றும், உலகியல் வாழ்க்கையை வரப்பிரசாதம் என்றும் இந்து சமயம் கூறுகின்றது. அமிர்தத்துவமாகிய ஆனந்தத்திற் பங்கு உடையவர்களாகிய மக்கள் அனைவரும் பரிசுத்தம் பொருந்திய பூரணர்கள். இவர்களில் ஒருவரும் பாவிகள் இல்லை. ஒரு மனிதனை அவ்வண்ணம் அழைப்பது பாவமாகும். மனித இயற்கைக்கு அது ஒரு நிலையற்ற பழிச் சொல்லாகும். யான் பாவி யான் பாவி என அல்லும் பகலும் சொல்லுபவன் உண்மையாகவே பாவியாகி விடுகின்றான்.

அண்ட சராசர மெல்லாம் வியாபித்திருக்கும் இறைவனை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே கண்டவர்கள் ஞானிகள், சீவனுக்குள்ளேயே சிவமணம் பூத்த நிலையில் உள்ளத்தைக் கோயிலாக்கி வாழ்ந்த தவசீலராகிய திருமூலர் உடம்மைப் கோயிலாகப் பேணினால் இறைவனை அகத்திலே காணலாம் என்கிறார். அழிந்து போகின்ற இந்த உடலை உயிர் இருக்கும் வரை ஆரோக்கியத்தோடும் உறுதியோடும் பாதுகாக்க வேண்டிய காயசித்தி உபாயத்தைத் திருமந்திரப் பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. இறைவன் வீற்றிருந்து அருள்புரியும் திருக்கோயில்களைப் பரிசுத்தமாகப் பாதுகாப்பது போல உடம்பையும் ஆரோக்கியத்தோடு பேண வேண்டும். இறைவன் வீற்றிருக்கும் கோயிலான உடம்பினைப் போதவஸ்துக்களையும்

புலாலையும் இட்டு நிரப்பும் சுடுகாடாக மாற்றக் கூடாது. தெய்வம் வீற்றிருக்கும் கோயிலை பேய் பசாசுகள் குடியிருக்கும் இடமாக ஆக்கக் கூடாது. உடம்பினுள்ளே இறைவன் வீற்றிருக்கிறான் என்பதை உணர்ந்த பின்பு உடம்பினைத் தெய்வம் வதியும் ஆலயமாகப் போற்றுகிறேன் எனத் தவயோகி திருமூலர் கூறுகின்றார்.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம் பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.

மனிதர்கள் ஒவ்வொரிடமும் சாத்வீகம், ராஜசம், தாமதம் ஆகிய முக்குணங்களும் காணப்படுகின்றன. தனி மனிதர்களின் உணவுப் பழப்ப வழக்கங்கள், நாளாந்தச் செயற்பாடுகள் என்பவற்றுக்கு அமையக் குணங்களின் அளவுகளும் மாறுபட்டுக் காணப்படும். நாம் உண்ணும் உணவிற்கும் நமது குணங்களிற்கும் இடையே தொடர்பு இருப்பதாக பகவத்கீதை கூறுகிறது.

பால், பழம், மரக்கறி ஆகிய சைவ உணவுகள் ஆயுள், புத்தி, பலம், ஆரோக்கியம், சௌக்கியம், மகிழ்ச்சி என்பவற்றை விருத்தி பண்ணும். ஊன் வகை உணவுகள் அதிக உப்பு, புளிப்பு, உறைப்புடன் கூடிய உணவுகள் உஷ்ணமான ஆகாரம் என்பவை ராஜஸ குணத்தை தோற்றுவிக்கும். காலம் கடந்த பழைய புளித்த அழுகிய உணவுகள் தாமத குணத்தை ஏற்படுத்தும்.

மனிதனின் உயரத்திற்கு ஏற்ப நிறை எவ்வாறு அமைய வேண்டும் என்று மருத்துவ நூல்கள் கூறியுள்ளன. நம்மில் பலர் பசிக்காகச் சாப்பிடாமல் ருசிக்காகச் சாப்பிடுவதன் விளைவாக உடம்பின் பருமன் அளவுக்கதிகமாகக் கூடுகிறது. இதனால் தூக்க முடியாத பாரத்தை நாளாந்தம் தூக்கிச் சுமக்கும் நிலைக்கு ஆளாகி விடுகின்றோம். இறந்த பின்பு பாடையிலே வைத்து நான்கு பேர் சுமக்கும் உடலை நாம் தனியாகச் சுமக்கும் பொழுது சுமையைத் தாங்கக் கூடிய பாரத்தில் வைத்திருக்க வேண்டும் எனத் திருமுருக கிருபானந்தவாரியார் கூறுவார். வாயைக்கட்டு என்று மருத்துவர் கூறியதைக் கேளாத காரணத்தினால் பல வீடுகள் இன்று மருந்தகங்களாக (Pharmacy) மாறிவிட்டன.

"தேகேயா தேவாலய (தேகம் தெய்வம் வீற்றிருக்கும் கோயில்) என்றே வேதமும் கூறுகிறது. மனித உடலுக்கு "துங்க பத்ரா" என்றொரு பெயருண்டு, துங்க என்றால் எல்லையற்றது. "பத்ரா" என்றால் பவித்திரமானது. எனவே மனித உடல் எல்லையற்ற அளவு கொண்ட ஒரு பவித்திரமான பாத்திரம். இது கிடைத்தற்கரிய ஒரு வரப்பிரசாதம். ஆனால் பலர் இந்தச் சிறப்பினை உணராமல் தவிக்கின்றார்கள்.

உடலின் அழகும் வலிமையும் நிரந்தரமானவையல்ல என்பது அனைவருக்கும் தெரியும். இளமை, அழகு, செல்வம், பதவி, அதிகாரம் ஆகிய அனைத்தும் நிலையில்லாதவை என்பதை உணர்ந்து கொள்ளாமலேயே பலர் இவ்வுலக வாழ்வை நீத்து விடுகிறார்கள். குமரப் பருவத்தின் ஆரம்பத்திலிருந்து நாற்பது வயது வரை உடலின் உறுப்புக்கள் அனைத்தும் வீறு கொண்டு செயற்படும். நாத ஒலியினை எழுப்பும் வீணைகளாக இயங்கும். நாற்பது தாண்டியதும் மெது மெதுவாக எதிரொலி கேட்க ஆரம்பிக்கும். தலைமயிரில் நரைகள் தோன்றும். கண்பார்வை சீராக இருக்க கண்ணாடி தேவைப்படும். நாற்பதுக்கு முன் கடினமான உணவுகளும் ஜீரணமாகிவிடும். பின் அரிசியும் பருப்பும் கூடச் சமிபாடு அடையாமல் சண்டைபோடும்.

இயற்கையோடு ஒட்டிய வாழ்வில் இருந்து இன்றைய மனிதன் விலகி வருகின்றான். வாழ்வின் சகல அம்சங்களிலும் செயற்கைத் தன்மை அதிகரித்து விட்டது. மனிதன் இயந்திரம் மாதிரி இயங்குகின்றான். வாழ்க்கை முறை மாற்றம், உடலுக்கு உதவாத உணவுப்பழக்க வழக்கங்கள், உடல் நலத்தில் கவனம் செலுத்தாத தன்மை ஆகிய அனைத்தும் உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் காரணிகளாக உள்ளன. புனிதமான மனதும் ஆரோக்கியமான உடலும் ஒன்று சேர்ந்தால் தான் ஒரு முழு மனிதனாக வாழமுடியும். எனவே "தெய்வங்களாகுங்கள்: பிறரைத் தெய்வங்களாக்குங்கள்" என்ற விவேகானந்தரின் அருள் ஆணையை என்றுமே நினைவிற் கொண்டு செயற்படுவோமாக!

காலம் நம் கையில் கட்டுண்டு கிடவாது

"நல்லறிவானது எல்லாத் திக்கில் இருந்தும் நம்மை நோக்கி வருவதாக" என்பது இருக்கு வேதத்தில் வரும் பிரார்த்தனை சுலோகம் ஆகும். எப்பொருளை எவர் சொல்லக் கேட்டாலும் சொல்லப்பட்ட அப்பொருளின் உண்மையையும் இயல்பையும் கண்டறிவதே அறிவு என்பதை

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" *- திருக்குறள் 423*

என்ற தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறுகிறது. பிரித்தானியர்கள் உலகின் பல நாடுகளைக் கைப்பற்றித் தங்களின் குடியேற்ற நாடுகளாகப் பல வருட காலம் ஆட்சி செய்தார்கள். அந்தந்த நாட்டில் உள்ள அறிவுப் பொக்கிஷங்களையெல்லாம் தங்களுடைய மொழியில் மொழி பெயர்த்தார்கள்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள்
யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று மகாகவி பாரதியார் தமிழ் மக்களுக்கு அறிவுரை வழங்கினார். ஆனால் பாரதியின் வாக்கினை நடைமுறையில் செயல்படுத்தியவர்கள் ஆங்கிலேயர். ஆங்கிலேயருடைய பண்பாட்டுக் கோலங்கள் பலவற்றை நம்மவர்கள் பின்பற்றுகின்றார்கள். நம்மிடமிருந்த உயர் விழுமியங்களை உதறி எறிந்து விட்டு வெள்ளைக்கார நாகரிகத்திடம் நம்மவர்கள் பலர் சரண்புகுந்து விட்டார்கள். நமது சமூகத்திற்கும், பண்பாட்டிற்கும் ஒவ்வாதவற்றை அரவணைத்துக் கொண்டு அவர்களிடமிருந்து பின்பற்ற வேண்டிய பல நல்ல அம்சங்களை உதறி விடுகின்றார்கள். "காலம் பொன்னானது" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. காலத்தைச் சரியாகப் பயன்படுத்தியவர்கள் தமது வாழ்வில் வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறார்கள். காலத்தைச் சரியாக பயன்படுத்தாதவர்கள் வாழ்வில் தரித்திரத்தையே அரவணைத்துள்ளார்கள். நேரம் தவறாமல் கார்யங்களைச் செய்தல் வேண்டும் என்பது ஆங்கிலேய நாகரிகம் நமக்குத் தந்த படிப்பினை ஆகும்.

"கடவுளுக் அடுத்த படியாக நேரத்தை மதிப்பது ஒழுக்க முறையில் உயர்ந்த விதியாகும்" என்பது வால்டேர் என்ற அறிஞரின் கருத்தாகும். சூரிய உதயத்திற்கு முன்பே வெற்றி நோக்கத்துடன் எழுந்து புன்முறுவலுடன் செயலாற்ற ஆரம்பித்தால் அந்த நாள் முழுவதும் வெற்றிகரமாக அமையும். பிரம்ம முகூர்த்தமாகிய அதிகாலை 4.00 மணிக்கு நித்திரையால் எழந்து நமது கடைமைகளை ஆற்றுபவர்களுக்கு இலட்சுமி கடாட்சம் கிடைக்கும். இவ் உலக வாழ்வில் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு கிட்டும். சூரிய உதயத்திற்குப் பின்பும் புரண்டு படுத்துக் கிடந்து விட்டு பின்பு மிகுந்த அசட்டையுடன் கொட்டாவியையும் விட்டுக் கொண்டு வேண்டா வெறுப்புடன் எழுந்தால் இகபோக நலன்கள் எல்லாம் நம்மைவிட்டு அகன்று விடும். அதிகாலையில் துயில் கொள்பவர்கள் தமது தவப்பொழுதை அவப்பொழுதாக மாற்றி விடுகிறார்கள் என்பதைக் "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே" என்று மணிவாசகரின் தெய்வ வாசகமாகிய திருவாசகம் குறிப்பிடுகிறது.

நாளாந்தம் 7 - 8 மணித்தியாலம் வரை தூங்குதல் நல்லது என்றே வைத்திய நூல்கள் கூறுகின்றன. சராசரியாக நாளாந்தம் 8 மணித்தியாலம் துயில் கொள்கின்ற ஒருவர் ஒரு நாளில் 1/3 பங்கைத் தூக்கத்திலேயே கழிக்கின்றார். எழுபத்தைந்து வருடங்கள் இந்தப் பூவுலகத்திலே வாழ்ந்தவர் சராசரியாக இருபத்தைந்து வருடங்கள் நித்திரையில் கழித்து விடுகின்றார். அவர் ஓடியாடி இயங்கிய காலம் ஐம்பது வருடங்களுக்குள் மட்டுப்படுத்தப்படுகிறது. நேரத்தைக் கண் போன்று பாதுகாத்துப் பொன் போன்று செலவிட்டவர்கள் வாழ்க்கையில் வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறார்கள். இப்போதே என்பது வெற்றியின் தாரக மந்திரம். நாளை என்பதும் பின்பு என்பதும் தோல்வியின் தோழன் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். நாளை என்பது நளினமான நம்முடைய நேரத்தைப் பலியாக்கும் தன்மையுடையது. இதனால் தீர்மானம், திட்டம், சிந்தனை எல்லாம் சிதறி விடும். இது சோம்பேறித் தனத்தை வளர்க்கும் "நேரத்திற்கும் சிறகுகள் உண்டு. அவை அதனைத் தோற்றுவித்தவரிடம் சென்று நாம் எப்படி உபயோகித்தோம் என்பதைத் தெரிவிக்கும்" என்று கற்பனை நயத்தோடு ஆங்கிலக் கவிஞர் மில்டன் கூறுகின்றார்.

இளமைக் காலம் வாழ்வின் வசந்த காலம். மாணவர்கள் தமக்குரிய நேரத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டும். வீதி சுற்றுவதும், வீண் அரட்டை அடிப்பதும், போதை வஸ்துக்களுக்கு அடிமையாவதும் தனது வாழ்வைத் தானே அழிப்பதற்குத் துணை செய்யும். மாணவர்களே! உங்களுடைய பொன்னான நேரத்தை வீணாக்காதீர்கள். ஓர் உழவனுக்கு விதைக்கும் காலம் எவ்வாறு முக்கியமானதோ அதே போன்று தான் மாணவர்களுக்கு கற்கும் காலம். எதிர்காலத்தில் வெற்றியை அறுவடை செய்ய வேண்டும் என்றால் நிகழ்காலத்தில் வியர்வைத் துளிகளை உழைப்பு என்ற வயல்களில் விதைக்க வேண்டும். உளிகள் உறங்கினால் சிலைகள் இல்லை. அது போல மாணவர் சமுதாயம், இளைஞர் சமுதாயம் நேரத்தை உழைப்பாக மாற்றவில்லை என்றால் வாழ்வில் வெற்றி ஒரு நாளும் கிடைக்கப் போவதில்லை.

காலம் தாழ்த்தல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகிய நான்கும் அழிவைத் தேடிப் போக நினைப்பவர் விரும்பி ஏற்கும் மரக்கலம் என்பதை

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கு

கெடு நீரார் கருமக் கலன்" - ***திருக்குறள் 605***

எனச் செந்தாப்போதரும் செப்புகிறார். ஆரோக்கியத்தை இழந்தால் மருத்துவரால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் காலத்தை இழந்து விட்டால் திரும்பிப் பெற முடியாது. காலமறிந்து நடப்பவனுக்கு வறுமை என்பது இல்லை. வாழ்வு உயர்வடையும். காலத்தை இழந்தவனே வறுமையை அணைத்துக் கொள்கிறான். பக்குவம் அற்றவர்கள் காலத்தைப் போக்குவதற்கு என்ன வழி என ஆராய்கிறார்கள். ஆனால் அறிவுள்ளவர்கள் நேரம் போதவில்லையேஎன்று வருத்தப்படுகின்றார்கள். காலத்தை யாரும் கட்டி வைக்க முடியாது. காலத்தோடு ஓடிக் கடமைகளைச் சரியாகச் செய்பவன் கர்மயோகி ஆகிறான்.

ஞான தாகம் கொண்ட ஒரு ஆன்மீகவாதிக்கு தன்னலம் கருதாத வாழ்வும் தயாள சிந்தனையும் மெய்ஞ்ஞான ஈடுபாடும் அவசியம்.

- ஆத்மஜோதி

பிரார்த்தனை

பிரார்த்தனை என்பது ஆன்மீக சாதனைகளின் ஓர் அங்கம். மனமுருகிப் பிரார்த்தித்தால் கடவுள் அதற்குச் செவிசாய்ப்பார். பிரார்த்தனையால் இறைதரிசனத்தையும் ஆத்ம ஞானத்தையும் பெறலாம். பிரார்த்தனை மூலம் எல்லா ஜீவாத்மாக்களும் இறைவனுடன் இணைய முடியும். "நமக்கு இந்த சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமானின் வாக்கு ஆகும். முத்திக்குரிய சாதனா மார்க்கங்களில் பிரார்த்தனையும் ஒன்றாக உள்ளது. திரிகரண சுத்தியுடன் பிரார்த்தனை செய்தால்தான் அதன் பலன் நமக்குக் கிடைக்கும். ஆண்டவன் நமக்கு வேண்டியதை நமது பிரார்த்தனைக்கு ஏற்பத் தந்தருளுகிறான். பிரார்த்தனை செய்து விட்டு நமது கருமங்களை ஆற்றும்பொழுது நாம் செய்கின்ற காரியங்கள் யாவும் சித்திக்கும். வீட்டில் நாளாந்தம் பிரார்த்தனை செய்து இறைவனைப் பூசிப்பதற்குப் பூவும் நீரும் போதுமானது. பூவும் நீரும் கொண்டு இறைவனை நாள்தோறும் பிரார்த்தனை செய்து பூசிப்பவர்களுக்கு இறைவன் திருவருளை வாரி வழங்குவான். ஆனால், பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்கின்ற பாவிகள் பிரார்த்தனை செய்வதிலும் இறைவனைப் பூசிப்பதிலும் இருந்து நழுவுகிறார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் எடுத்து விளக்குகிறது.

புண்ணியம் செய்வார்க்குப் பூ உண்டு நீர் உண்டு
அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும்
எண் இலி பாவிகள் எம்இறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின்றாரே ***-திருமந்திரம் 1828***

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பிரார்த்திப்பது, குடும்பத்தில் ஏற்படப் போகும் நன்மைகள் பலவற்றுக்குத் துணையாக அமையும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற பெருநோக்கோடு இறையருளால் தாம்

பெற்ற தெய்வீக அனுபவங்களையே தெய்வத் தமிழாகத் திருமுறை ஆசிரியர்கள் தந்துள்ளார்கள். இறைவனை வழிபடும் பொழுது நாம் ஓதக் கூடிய அர்ச்சனைக்குரிய மந்திரங்களாகவே திருமுறைப் பாடல்கள் காணப்படுகின்றன. "அர்ச்சனை பாட்டேயாகும்" என்பதே சேக்கிழார் பெருமானின் வாக்கு ஆகும். அப்பர் பெருமானின் போற்றிக் கயிலைத் திருத்தாண்டகப் பாடல்கள், மணிவாசகரின் சிவபுராணம் என்பன மந்திர மாலைகளாகவே திகழ்கின்றன. வெள்ளிக்கிழமையில் வீட்டில் உள்ள அனைவரும் ஒன்று கூடி, மேற்கூறிய பாடல்களை ஓதினால் குடும்ப அங்கத்தவர்களிடம் பந்துக்கட்டு (குடும்ப ஒற்றுமை) ஏற்படும். குடும்ப நன்மைக்காக அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்பர். கருத்து முரண்பாடுகள் ஏற்படாது குடும்பத்தின் தலைவனும் தலைவியும் கருத்தொருமித்து வாழ்வதே உண்மையான இன்ப வாழ்வு என்பதை "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" எனத் தமிழ் மூதாட்டி ஔவையாரும் கூறியுள்ளார். இன்று பல குடும்பங்களிலே கருத்தொருமித்த வாழ்வைக் காண்பதே அரிதாகி விட்டது. தலைவன் தலைவியரிடையே முரண்பாடுகள் வளர்ந்து விவாகரத்துக் கோரி நிற்கும் பரிதாபகரமான நிலை ஏற்பட்டு வருகிறது.

ஆன்மா இறைவனிடம் லயப்படும் இடமே ஆலயமாகும். ஆன்மா இறைவனிடம் லயப்படுவதற்கு ஆலயங்களில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடு துணையாக அமையும். அடியார்கள் பலரும் ஒன்றிணைந்து ஆலயங்களில் எழுப்புகின்ற ஒலி பேரின்ப ஒலியாக இருக்கும். சமுதாயமாக நாம் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கும் ஆலயங்களில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனைகளில் பங்கு பற்றுவதால் தீர்வு காணலாம். ஆலய விழாக் காலங்களில் சுவாமி வீதிவலம் வரும் பொழுது சுவாமிக்குப் பின்னால் கூட்டுப்பிரார்த்தனை தவறாமல் இடம்பெறல் வேண்டும்.

கடவுள் என்பவர் நாம் அடைய வேண்டிய இலட்சியம் மட்டும் அல்ல: நாம் வேண்டுவதைத் தரும் கர்த்தாவாகவும் இருக்கிறார். பிரார்த்தனை செய்வதன் மூலம் "நான் கர்த்தா அல்ல" என்று ஒப்புக் கொள்கிறோம். நீ தான் கர்த்தா என்று இறைவனிடம் சரணடைகின்றோம்.

பிரார்த்தனை பெரும்பாலும் இறைவனோடு உள் மனதின் உரையாடலாகவே நடைபெறும். புறத்தே அழுகையாக வெளிப்படுவதும் உண்டு. துன்பத்தில் உழல்வோர் தங்கள் வேதனையை நீக்கிக் கொள்ள இறைவனிடம் அழுது அழுதே பிரார்த்திப்பர். ஒரு வகையில் பிரார்த்தனை என்பதை ஆன்மாவின் அழுகை என்று கூடக் கூறலாம். "யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று தெய்வ வாசகமாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது.

பிரார்த்தனை என்பது வரையறுக்கப்பட்ட நமது ஆன்மா, வரையறைகளற்ற சச்சிதானந்தமான பரமாத்வாவோடு தொடர்புபடுத்திக் கொண்டு பயனடையும் ஒரு முயற்சியே ஆகும். நம்முள் அந்தர்யாமியாய் இருக்கும் இறைவனை இறைஞ்சிப் பணிந்து இதயமாகிய அக்கதவைத் தட்டுவது தான் பிரார்த்தனை.

பிரார்த்தனை உலகாயதமானது. ஆன்மீகமானது என இருவகைப்படும். வறுமை நீங்கிச் செல்வம் கொழிக்க, நோயிலிருந்து விடுபட, துன்பங்களைப் போக்க, துக்கநிவர்த்தி ஏற்பட என லௌகீகப் பிரார்த்தனைகள் பல வகைப்படும். மாசு நீங்கி மனம் சுத்தமாக வேண்டும். பக்தி வேண்டும், மனோபலம் வேண்டும் என்பவை ஆன்மீகமான பிரார்த்தனைகள். ஆன்மீகப் பிரார்த்தனை மனதின் அலைவை நிறுத்தி ஒரு முகமாகக் குவிவதற்கு உதவுகிறது. இப்படி மனம் குவிவது தியானத்தில் ஈடுபடுவதற்குத் துணையாக அமையும்.

பிறருக்காகப் பிரார்த்தனை செய்வது மனித நேயம் மிக்க சிறப்பான பணி. ஆனால் பிரார்த்தனை செய்பவருக்கு அதற்கான ஆன்மீகத் தகுதி இருக்க வேண்டும். பல்லாண்டு காலமாகப் பிரார்த்தனை என்ற சாதனையைத் தொடர்ந்து செய்து அதன் விளைவாகத் தன்னுள்ளே இறையனுபூதியை உணர்ந்தவர்கள் பிரார்த்தித்தால் அதற்குப் பலன் கிடைக்கும். இதே போன்று யாருடைய நலனுக்காக நாம் இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறோமோ அவருக்கு இறை நம்பிக்கை இருப்பதுடன் இறையருளால் தான் பிரச்சினை தீரும் என்ற நம்பிக்கையும் இருக்க வேண்டும்.

பிரார்த்தனை இதயத்தின் ஆழத்திலிருந்து தோன்ற வேண்டும். இறைவா நீயே கதி: உன்னை அன்றி யாரால் என் தேவையை நிறைவேற்ற முடியும்? என்ற முழுநம்பிக்கையுடன், வேறு குறுக்கு வழியை நாடாமல் அவனது அருளை மட்டும் நாடி வேண்டுவதே பிரார்த்தனை. நமது பிரார்த்தனைகள் நிறைவேற ஆண்டுகள் பல ஆகலாம். நாம் பிரார்த்திப்பதில் நம்பிக்கை இழந்து தொய்வு விழ அனுமதிக்கக் கூடாது. உறுதியாக பலன் கிட்டும் வரை தொடர வேண்டும்.

பிரார்த்தனைக்கான தகுதிகள் நியமங்கள் சரியாக அமைந்து விட்டால் பெரும்பாலும் அவை நிறைவேறி விடும். பல மகான்களும் அவதார புருஷர்களும் இதற்கு உறுதியளித் துள்ளார்கள். நமது வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும் இதனை நாம் உணர முடியும். நியாயமான நேர்மையான பிரார்த்தனை ஒரு போதும் வீணாவதில்லை.

பேராசை, காமவெறி, பொறாமை, கோபம், போர்க்குணம், ஆணவம் என்பன அமைதியின் விரோதிகள். விவேகம் வைராக்கியம், பற்றின்மை என்னும் வாளால் இந்த அவப் பகைவர்களை இல்லாது ஆக்குங்கள்.

- ஆத்மஜோதி

தமிழ் பக்தி மொழி

அமிழ்தினும் இனிய நம் செந்தமிழ்மொழி பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் பொலிந்து நிற்பதாகும். தொன்மைச் சிறப்புடன் தகைசால் இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டிலங்குவது நம்முடைய தமிழ்மொழி. அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்களைப் போல பிறமொழிகளில் இல்லை என்பது அறிஞர் கூற்றாகும். ஆங்கிலத்தை வணிகத்தின் மொழி என்றும், இலத்தீனை சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கத்தை இசையின் மொழி என்றும், பிரஞ்சை காதலின் மொழி என்றும் கூறுவது போலத் தமிழை பக்தியின் மொழியென்று மொழியியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

தெய்வப்புலவர் சேக்கிழாரும் "ஞாலமளந்த மேன்மை தெய்வத் தமிழ்" எனத் தமிழ்மொழியின் சிறப்பினைப் போற்றுகின்றார். "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்பது அப்பர் பெருமானுடைய வாக்காகும். தமிழர் தெய்வமாகிய முருகப்பெருமான்தான் தனக்கு கவிபாடும் ஆற்றலைத் தந்தான் என்பதை "அரிய தமிழ் தானளித்த மயில் வீரா" என அருணகிரிநாதரும் திருப்புகழில் குறிப்பிடுகின்றார். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" எனத் தவயோகி திருமூல நாயனார் அருளிய திருமந்திரமும் கூறுகின்றது. "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே; அதைத் தொழுது படித்திடடி பாப்பா" என மகாகவி பாரதியாரும் பகர்ந்துள்ளார். தெய்வ மொழி, பக்தி மொழி, அர்ச்சனைக்குரிய மொழியென அறிஞர்களால் போற்றப்படுகின்ற தமிழ்மொழியிலுள்ள தோத்திர இலக்கியங்களைப் பாடி நாம் அனைவரும் இறையருளைப் பெறுவோமாக!

"திருமுறைகள் ஓதாய் மனமே உனக்கென்ன வாய்"

Sivaranjanam. 077 3068982